







# 1

வீடு களைகட்டி விட்டது

கிழமை – ஞாயிறு

நேரம் – காலை ஒன்பது.

ரேடியோவின் அசுருதி இல்லை.

தூர்தர்ஷனை எப்போதோ நிறுத்தியாகிவிட்டது.

சாரதம் ஹாலை ஒரு தடவை நோட்டம் விட்டாள். நைந்து பிய்ந்து போன, தொள்ளாயிரத்து எழுபத்திரண்டில், ஜயபாரதம் கடையிலிருந்து வாங்கிய பிரம்பு நாற்காலியில், கோர்ட்டில் மஞ்சள் காகிதத்தைக் கொடுத்து விட்ட மானியைப் போல சாம்பசிவம் தலை குனிந்தவராய் உட்கார்ந்திருந்தார். கூடத்தை ஒட்டினாற் போன்ற அறையின் வாயிலில் ஒரு முக்காலியைத் தற்காலிக பீடமாகக் கொண்டு மூத்த பெண் வைதேகி அமர்ந்திருந்தாள். எதிர்த் திசையில், பிள்ளை பாபு சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான். இரண்டாவது பெண் சுபாவும், அப்போதுதான் ஆறு இட்லிகளைத் தின்று அரை லிட்டர் காப்பியையும் குடித்துவிட்டு வந்த இரண்டாவது பிள்ளை வீராவும் (வீரராகவன்) ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தார்கள்.

''மறுபடியும் சொல்றேன். கேட்டுக்குங்க!''

சாரதம் தேர்தல் கூட்டத்தில் முழங்குவது போல முழங்கினாள்.

''இன்னும் ரெண்டே நாள்ல, நம்பகூட சொந்த பந்தமே கொண்டாடாத, வைச்சுக்காத உங்க சித்தப்பா...''

''காலம் சென்ற சித்தப்பா!'' என்று வீரா இடைமறித்தான்.

''சரி லேட் சித்தப்பாவின் ஒரே பெண் ரேவதி இங்கே டேரா போட வர்றா. அப்புறம் இந்த வீடு வீடா இருக்காது.''

''எல்லாரும் நன்னாக் கேட்டுக்குங்க... இந்த ரேவதி ரொம்ப நாளுக்கு இங்கே தங்கப்படாது. நாம தங்கவிடப்படாது. அவ உங்க சித்தப்பா பொண்தான். என் கொழுந்தன் பொண்தான். ஆனா ரெண்டு குடும்பத்துக்கும் பத்து வருஷமா போக்குவரத்தே கிடையாது. செத்துப் போனவங்களைப் பத்திக் குத்தமா, குறையாப் பேசறது சரியில்லைதான். பாவம் கூட. ஆனா சிலதைப் பத்தி இப்ப உங்ககிட்டேயெல்லாம் பேசாம



இருக்கக் கூடாது. உங்க சித்தி ஒரு நா கூட என்னை மதிச்சதில்லே. உங்க தாத்தாவும், பாட்டியும் அப்ப உயிரோட இருந்தாங்க. சித்தப்பா அவ கழுத்தில தாலி கட்டினார்...''

''ஏன் சுபா தாலியைக் கழுத்திலதானே கட்டணும்?'' என்றான் வீரா.

''எனக்குத் தெரியாதுப்பா. இடுப்பிலேயும் கட்டுவாங்களோ என்னவோ...?''

''ரெண்டு பேரும் குறுக்கே குதறாதிங்க.'' என்ற சாரதம் தொடர்ந்தாள். ''தம்பதி சமேதரா அவங்க ஊருக்கெல்லாம் விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணினாங்க... அத்தை, சித்தி, மாமா, மாமின்னு..''

''ஒன் மினிட் ப்ளீஸ்!''

திடிரென்று ஒரு புதுக்குரல் வரவே சாரதம் நிறுத்தினாள். மற்றவர்கள் குரல் வந்த திசையில் கண்களைச் செலுத்தினார்கள். சத்யா என்கிற சத்திய மூர்த்தி.

''என்னடா சத்யா?''– வைதேகி.

''நீ ஏன் குறுக்கே குதர்றே?'' – வீரா

''நீ பாத்ரும்ல பாடிட்டிருந்தியே?'' – சுபா

''ஈரத் தலையைத் துவட்டிக்கடா சத்யா?'' என்றார் சாம்பசிவம்

பாபு மட்டும் பேசவில்லை.

''என்னடா!''

''என் மாமி கலியாணத்தின் போது எனக்கு வயசு நாலோ அஞ்சோ... நான் இந்த நமஸ்காரங்களையெல்லாம் பாராம மண்டபம் பூரா ஓடி விளையாடிட்டிருந்தேன்... என் அம்மாவை, அதான் உங்க சின்ன நாத்தனாரையும் என் அப்பாவையும் இவங்களோட சித்தி. அதான் உங்க ஓர்ப்படி, நமஸ்காரம் பண்ணினாளா?'' என்றான் சத்யா.

''உன் அம்மா, அப்பாவைக் கூட பண்ணினாள்டா. ஆனா என்னை – இல்லே– எங்களைப் பண்ணலே ஏன்? ஏன்? நான் ஒரு சாதாரண எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியார் பொண்தானே? அப்ப இளப்பம் காட்டினவ கண்ணை மூடற வரை நிறுத்தலே.''

''ஓ, ஒநாய் – ஆடு கதை!'' என்றான் வீரா.

சாரதம் லட்சியம் செய்யாமல் தொடர்ந்தாள்.

''என் கேவலம் அதோட நின்னுதா? இல்லியே? என் புருஷன் யார்?. மன்னார்த் தெருவில ஒண்ணே கால் கிரவுண்ட் இருக்கு சார், சீப்பா முடிச்சுடலாம்... அபிராமபுரத்தில தெக்கு பார்த்த வீடு. மெட்ராஸ் டெரஸ்... சுத்தி பத்து தென்னை மரம் இருக்கு. அஞ்சு லட்சத்துக்கு அவங்க ரெடி... இப்படியெல்லாம்



பேசி முடிக்கிற ப்ரோக்கர் பெண்டாட்டிதானே...''

''இதுக்காகக் குறைப்பட்டு அழாதேம்மா!'' என்ற வைதேகி, ''நான் எம்.ஏ. பிஎெட்'' என்றாள். ''நான் எம்.ஏ. லிட்ரெச்சர். எம்ஃபில் படிக்கிறவள்'' என்றாள் சுபா.

''அண்ணா ஏ.ஜி. ஆபிஸ்ல செக்ஷன் ஆபிசர். என்னைப் பத்தி நானே சொல்லிக்கக் கூச்சமா இருக்கு...'' வீரா இழுத்தான்.

''அப்படீன்னா நான் சொல்லிடறேன்... நம்ப வீரராகவன் காலேஜ் அஸிஸ்டண்ட் புரொபசர்!''

''நாங்க இவ்வளவு பேர் இவ்வளவு படிச்சிருக்கறப்ப நீ எலிமெண்ட்ரி ஸ்கூல் டீச்சர் பொண்ணா இருந்தா என்ன, ஹவுஸ் புரோக்கரின் மனைவியா இருந்தா என்ன அம்மா?''என்றாள் சுபா.

''மணி பத்து அடிக்கப் போறது நாம வம்பு பேசிட்டே போறாம். உருப்படியா இன்னும் ஒண்ணு சொல்லலை அம்மா!''– வைதேகி.

''எங்க விட்டேன்?''

''நமஸ்காரத்தில...'' என்றான் சத்யா.

''இப்படியெல்லாம் அவ என்னை ஏளனம் காட்டினாலும் நான் எதையும் மனசில வைச்சுக்கலே. அவ அமெரிக்கா போறப்ப முறுக்கு சுத்திக் குடுத்தேன். வடாம் இட்டுக் குடுத்தேன். மாகாளி ஊறுகா போட்டுக் குடுத்தேன்... எல்லாத்தையும் கூட்டிட்டு பிளேன் ஏறினவ ஒரு தாங்ஸ் கூட சொல்லலே''.

''இது தப்பு. மகா தப்பு. அநியாயம்'' என்றான் வீரா.

''கரெக்ட் வீரா. சித்தி அம்மாவுக்கு தாங்க்ஸ் சொல்லியிருக்கணும். அம்மா ஒரு டம்ளர் வாட்டர் தந்தாக் கூட, நாமெல்லாம் அவளுக்கு தாங்க்ஸ் மம்மிங்கறோம்!''என்றாள் சுபா.

''கேளுங்க எல்லாரும்... இப்பவே இந்த வீடு நம்ம எல்லார்க்கும் போதலே. கீழே இந்த ஹாலும் அந்த ஒரு ரூம்தான். மாடியில இதே மாதிரி ஒரு ஹால், சொப்பு சொப்பா ரெண்டு ரூம். கிராதி போட்ட திண்ணையில் ஒரு பக்கம் ஒரு பெஞ்ச்ல உங்க அப்பா படுத்துக்கறார். இன்னொரு பக்கம் தரையில சத்யா தூங்கறான். மாடியில நீங்க மூணு பேரும் இருக்கீங்க. நம்ப பாபுவுக்கும் அவன் பெண்டாட்டிக்கும் கீழே இந்த ரூம்ல இருக்கவே பிடிக்கலே. நான் ஹால்ல ஒரு கோடியில முடங்கறேன். நிலைமை இப்படி இருக்கிறப்ப இந்த ரேவதிப் பொண்ணு வர்றா!''

''ஒரு நிமிஷம், அம்மா!''

''என்னடீ சுபா?''

''பெரிய அண்ணா சம்பாதிக்கிறான். மன்னி சம்பாதிக்கிறா. ரெண்டு பேருமா நிகரமா வீட்டுக்குக் கொண்டு வர்ற பணம் மாசம் ஐயாயிரத்து எண்ணூறு. இதில வீட்டுக்கு எவ்வளவு போடறாங்க? ரேஷன் வாங்கறாங்க. ரெண்டு மாசத்துக்கு ஒரு வாட்டி எலக்ட்ரிக் பில் கட்டறாங்க. ஆவின் பால் வாங்கறாங்க. எல்லாமா ஆயிரம் – மிஞ்சிப் போனா இருநூறு அதிகம் இருக்கட்டும் – தர்றாங்க. அண்ணாவும் மன்னியும் ஏன் தனி வீடு பார்த்துட்டுப் போகப்படாது? இங்கே இருந்துக்கிட்டு குறைப்பட்டுப்பானேன்...? மன்னி டயரியில குறிச்சு வைச்சுட்டு உங்கிட்ட தினசரி வார்த்தை யுத்தம் நடத்தறா. இப்ப பிறந்த வீட்டுக்கும் போயிட்டா. எப்ப வருவாளோ?''

''ஏண்டி சுபா, அந்த ரேவதிக்காக உன் அண்ணா தனிக் குடித்தனமே போகணுமா?'' என்றாள் சாரதம்.

''நான் ரெடி அம்மா!'' என்றான் பாபு.

''அப்ப நல்ல வீடாப் பாரு அண்ணா...'' – வீரா.

''ரேவதிக்காகச் சொல்லலே அண்ணா... நீயும் மன்னியும் சகல சௌகரிய சௌபாக்கியத்தோடு தனியா இருக்கறது நல்லதுதானே...? எனக்கு வயசு முப்பது ஆகப் போறது. ஆனா கலியாண வேளையோ யோகமோ இன்னும் வரலே. அது வந்தப்புறம்தான் என்னால இந்த வீட்டை விட்டுப் போக முடியும். நீ தனிக்குடித்தனம் போனா நான் இந்த ரூமுக்கு வந்துருவேன்.''

பாபு பதில் சொல்லவில்லை.

''இப்ப இவனோட தனிக்குடித்தனமா பிரசினை?'' என்றாள், சாரதம். பிறகு தொடர்ந்து, ''இத்தனை வருஷமா நாம இந்த வீட்ல ஏதோ நிம்மதியா இருக்கோம். இப்ப நம்மை அண்டி ஒரு பொண்ணு வர்றா. ஒரு மரியாதை காரணமா, உங்க அப்பாவோட தம்பி பொண் என்கிற ஒரு அபிமானம் காரணமா அவளை இந்த வீட்ல இருக்க இடம் கொடுப்போம்?'' என்றாள். பிறகு, ''கொஞ்ச நாளுக்கு!'' என்றாள்.

''அப்புறம் என்ன செய்யறது சாரதம்?''

அப்பா வாய் திறந்து நான்கு வார்த்தைகள் பேசி, அதை ஒரு கேள்வியாகவும் கேட்டு விட்டாரே! எல்லாருமே வியப்புடன் அவரைப் பார்த்தார்கள்.

ஆனால் சாரதம் ஆச்சரியப்படவில்லை.

''என்ன செய்யறதுன்னு எனக்குத் தெரியும்.''

''உன்னால எதுவும் செய்ய முடியாது, சாரதம்?''



என்றார் சாம்பசிவம். கூடவே ஒரு நிமிடம் மௌனத்தில் உறைந்தது.



## 2

''எதுக்குடா அலர்றே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் சாரதம்.

''நாளை தாதர்ல...''

''தாதர்ல!''

''அவ வர்றா!''

''ரேவதியா..! அமெரிக்காவிலிருந்து எப்படியடா மடையா தாதர் எக்ஸ்ப்ரெஸ்ல வர முடியும்?''

''நானும் மொதல்ல அப்படித்தான் நினைச்சேன், மாமி... அப்புறம்தான் தெரிஞ்சது, ரேவதி பஞ்சநதம் பாம்பே வரை பிளேன்ல வந்திருக்கா. அங்கேயிருந்து...''

''சரி, வேறு என்ன சொன்னா?''

''மாமா சென்ட்ரல்ல அவளை ரிஸீவ் பண்ணணுமாம்.''

''லங்கிணிக்கு அமெரிக்காவிலேர்ந்து பாம்பே வரை துணையில்லாம வரத் தைரியம் இருக்கு. சென்ட்ரல்லேந்து வீடு வரை வர முடியலையோ?''

''யாராலும் நம்ப சென்ட்ரல் ஸ்டேஷன் ஆட்டோ, டாக்ஸிக்காரங்களைப் பத்தி ரேவதியை பயமுறுத்தியிருப்பாங்க...''

''சரி, இப்ப நான் என்ன செய்யணும்டா, சத்யா?''

''குறுங்காம அலுங்காம இருங்கோ, அதுவே போதும், மாமி. நான் எல்லாத்தையும் பார்த்துக்கறேன்.''

''சரிடா சத்யா!'' என்ற சாரதம் திடீரென்று குழைந்தாள். ''சத்யா.''

அவளுடைய குரலின் நெகிழ்ச்சியில் கரைந்து போய்விட்டதுபோல சத்யா நடித்தான்.

''என்ன மாமி?''

''ஏதோ ஒரு ரகசியத்தை நேத்து நீ மறைச்ச வைச்சியே,



அது என்னடா! நீயும் மாமாவும் அஞ்சாறு வருஷத்துக்கு முன்னால பாம்பேக்கு சின்னமாமாவைப் பார்க்கப் போனது பத்திப் பேசினீங்களே, அது என்ன விஷயம்டா, சத்யா?''

''மெல்ல மெல்லத் தெரிய வரும், மாமி.''

''எங்கிட்ட சொல்லப்படாதா?''

''படலாம். ஆனா இப்ப வேண்டாம்.''

''ஏண்டா சத்யா? நான் யார்ட்டேடா ரகசியத்தைச் சொல்லிடப் போறேன்?''

''வேற யாருக்குத் தெரிஞ்சாலும் கூட தப்பு இல்லே, மாமி.''

''அப்பமன்னா!''

''உங்களுக்கு மட்டும்தான் இப்பத் தெரியப்படாது.''

''நீ நாசமாப் போக.''

''தாங்க் யூ மாமி,'' என்ற சத்யா, ''இப்ப எங்கிட்ட உதிர்த்த இந்த வார்த்தையை தப்பித் தவறிகூட நாளைக்கு வரப் போற ரேவதிகிட்ட உதிர்த்திடாதீங்க. அமெரிக்காவிலேர்ந்து வர்ற பெண். கையில ரிவால்வர் இருக்கும்!''

''உலக்கையால ஒரு போடு போடுவேன்!'' என்றாள் சாரதம்.

சத்யா சிரித்தான்.

''என்னடா சிரிக்கிறே?''

''ரேவதியை நினைச்சுப் பார்த்தேன். சந்தோஷமா இருந்தது. அதான் சிரித்தேன்!'' என்றான் சத்யா.

அன்று மாலை வீடு குருக்ஷேத்திரமாக மாறியது.

''மாடியில இருக்கிற ரெண்டு ரூம்ல எதையும் நாங்க ஒழிச்சுக் கொடுக்க மாட்டோம்!'' என்றாள் சாம்பசிவத்தின் மூத்த பெண் வைதேகி.

''சுபா, நீயாவது...''

''முடியாதுப்பா... கலுன் போட்ட நாள்லேந்து நானும் அக்காவும் இந்த மாடியில இந்த ரெண்டு ரூம்ல இருந்துட்டு வர்றோம். அதில ஒன்னைக் காலி பண்ணுன்னா என்ன அர்த்தமாம்? இப்பவே என் ரூம்ல சத்யா தன்னோட பெட்டியை வைச்சுட்டு அடிக்கடி, கதவைத் தட்டி இம்சைப் படுத்தறான். அந்தை புண்ணையாச்சேன்னு நானும் பேசாம இருக்கேன். இப்ப ரூமையே காலி பண்ணுன்னா என்ன அர்த்தம்?''

''வேற வழி தெரியலேம்மா சுபா!'' என்றார் சாம்பசிவம்.

''அப்ப ஒன்னு செய்யுங்க.''



''என்னம்மா?''

''பாபுவோட ஒய்ஃப் இப்ப இங்கே இல்லே... அம்மாட்ட கோபிச்சுக்கிட்டு பிறந்த வீடு போயாச்சு. அந்த ரூமை பாபு ஒழிச்சுக் கொடுக்கட்டும்.''

''இளைக்கடி ரூம்மா!'' என்ற பாபு, ''என் ஒய்ஃப் அடிக்கடி அம்மா வீட்டுக்குப் போய் இருக்கிறது எல்லார்க்கும் தெரிஞ்சதுதான். அவ திடீர்னு திரும்பி வந்து எங்கே என் ரூம்னு கேட்டா நான் என்ன பதில் சொல்லுவேனாம்?'' என்றான் பாபு.

''இந்த புருஷ வீடே வேண்டாம்னு உதறி எறியறவளுக்கு அதில ஒரு ரூம் கேட்க என்ன உரிமை இருக்காம். அப்பா, சுபா சொல்றதுதான் சரி. பாபு ரூமை ஒழிச்சுக் கொடுக்கட்டும். திண்ணையிலேயோ இல்லே மாடி வெராந்தாவிலோ படுத்துக்கட்டும்'' என்றாள் வைதேகி.

''நத்திங் டூயிங்!'' என்ற பாபு, ''லேடீஸ் ஹாஸ்டலுக்கு வைதேகி போகட்டும். ரெயில்வே ஆடிட் ஆபீஸ்ல மாசம் ரெண்டாயிரத்து முன்னூறு வாங்கறாளே? அது கொஞ்சமாவது கரையட்டும்..''

''டோண்ட் பி ஸில்லி, பாபு! ஒரு பொண்டாட்டியை ஒரு ரூம்ல வைச்சுட்டு வாழத் தெரியாத புறம்போக்கு நீ! என்னை லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போகச் சொல்றியா? நீ என்னை விட மூணு வயசு பெரியவன். நீ காசி யாத்திரை புறப்படறப்பவே, சுத்து முத்தும் ஒரே பேச்சு, 'வயசான ஒரு தங்கை கலியாணத்துக்கு நிக்கறப்ப இந்தத் தடியனுக்கு என்ன அவசரம்'னு.. மத்த வீட்லயெல்லாம் தங்கையை ஒரு இடத்தில கொடுத்துட்டுத்தான் அண்ணன் மஞ்சு வேஷ்டியே கட்டிப்பான்.''

''உன்னை ஒரு டஜன் பேர் பெண் பார்க்க வந்தா! எவன்...''

''மூடுடா உன் வாயை!'' என்று சாரதம் கத்திக் கொண்டே களத்தில் குதித்தாள். பிறகு, ''உன் தங்கையைப் பத்திப் பேச உனக்கே வெட்கமாயில்லே,'' என்றாள்.

''இதில வெட்கப்படறத்துக்கு என்ன இருக்கு? உள்ளதைச் சொன்னேன்.''

இப்போது வீரா குறுக்கே வந்தாள்.

''வைதேகி லேடீஸ் ஹாஸ்டலுக்கும் போக வேண்டாம்.. சுபா காலேஜ் ஹாஸ்டலுக்கும் போக வேண்டாம், பாபு தன் ரூமையும் விட்டுக் கொடுக்க வேண்டாம். வரப்போறவ நம்ப சித்தப்பா பெண். நம்மளோட ஒன்னுவிட்ட தங்கை...''

''அதன் முஞ்சியைக் கூட நீங்கள்லாம் பதினைஞ்சு வர்ஷமாப் பார்த்தில்லே. எனக்கு மறந்தே போயிட்டது. நம்ப வீட்ல மட்டும் ஒரு தொழுவம்னு ஒண்ணு இருந்தா அதை அங்கே கட்டி வைப்பேன்!''

சாம்பசிவம் சிரிக்கவில்லை.

பாபு, வைதேகி, வீரா, சுபா யாரும் சிரிக்கவில்லை.

தான் பேசியதே குற்றமோ என்று சாரதம் நினைத்தாள். எல்லோருடைய முகங்களையும் மாறிமாறிப் பார்த்தாள்.

திடீரென்று சத்யா மட்டும் சிரித்தான். கலகலப்பு அறை முழுதும் எதிரொலித்தது.

''மாமி, இப்ப நீங்க பேசினது மட்டும் ரேவதிக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்! கட்டுப் பிடுவா கட்டு'' என்றவன், ''வீரா நீ ஏதோ சொல்ல வந்தியே அதைச் சொல்லித் தீர்த்து விடு'' என்றான்.

''விசேஷமா எதுவும் இல்லை, சத்யா... இந்த ரேவதி நாளைக்கு சாயங்காலம்தான் வரப் போறா. நாம ஏன் இப்பவே ரூமை ஒழிச்சு வைக்கறதில் நம்ப நேரத்தை வீணடிச்சு ஆர்க்யு பண்ணிக்கணும்? அமெரிக்காவில பிறந்து வளர்ந்த பொண், இந்தக் கார்ப்பரேஷன் தண்ணியைக் கூடக் குடிப்பாளோ என்னமோ? அவ வரட்டும். வீட்ல எல்லா ரூம்களையும் பார்க்கட்டும். பிடிச்சதை எடுத்துக்கட்டும். அவளும் சுபாவும் ஒரு வயசுன்னா ரெண்டு பேருக்கும் ஒத்துப் போகலாம்... ஏன் ரெண்டு பேரும் ஒரே ரூம்லேயே கூட தங்கிக்கலாம்னு ரேவதி சொல்லலாம்!'' என்றான் வீரா.

இதன் பிறகு யாரும் எதுவும் பேசவில்லை. ஆனால் வீரா மேலும் தொடர்ந்தான்.

''அம்மா, நீ உன்னை மாத்திக்கணும். விருப்பு வெறுப்புகள் மனுஷ மனசுகள்ளே இருக்கறது சகஜம்தான். ஆனா நீ, முஞ்சியே மறந்து போன ரேவதி பேர்ல ஏன் இவ்வளவு கடுப்பா இருக்கிறது நல்லது இல்லே. நாகரீகம் இல்லே. உனக்கு உன் மச்சினன் மீது கோபம் இருக்கலாம். ஒர்ப்படிமேல பொறாமையும் வெறுப்பும் இருந்திருக்கலாம். ஆனா இதையெல்லாம், அம்மா அப்பா ரெண்டு பேரையும் இழந்துட்டு, நம்ப வீட்டு நிழல் ஒண்ணுதான் ஆதரவா இருக்க முடியும்ங்கற நம்பிக்கையோட வர்ற ஒரு பெண் மேலே காட்டறது சரியில்லை.''

''போதும்டா உன் உபதேசம்!'' என்றாள்.

''அம்மாவை யாராலும் மாத்த முடியாது, வீரா!'' —சுபா.



''அம்மா, வீரா சொல்றதிலேயும் நியாயம் இருக்கு!'' என்றாள் வைதேகி.

''அம்மா எல்லாம் கொஞ்ச நாளுக்குத்தானே?'' என்றான் பாபு.

சாரதம் கணவரைப் பார்த்தாள்.

அவரும் அவளைப் பார்த்தார்.

பிறகு —

''ரேவதிக்கு எந்த இடம்னு நீங்க எல்லாரும் அலசிட்டீங்க. இல்லாத தொழுவம்னு நீயும் சொல்லிட்டே சாரதம்! ஆனா அவ மனசில என்ன வைச்சுட்டு இப்ப வர்றாளோ! தெய்வத்துக்குத்தான் வெளிச்சம்!'' என்றார்.



# 3

தாதர் எக்ஸ்பிரஸ் குறித்த நேரத்தில் சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தை என்றாவது ஒரு நாள் அடைந்து விட்டால், மறுநாள் பத்திரிகைகளில் அது செய்தியாக வரவேண்டியதாகும்.

அன்று நீண்ட நேரம் சாம்பசிவம் நான்காவது பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருந்தார். சத்யா ஆபிஸிலிருந்து வருவதாகக் கூறியிருந்தான். இன்னும் காணோம். கடிகாரத்தைப் பார்த்தார். ஐந்தே முக்கால். நான்கு முப்பத்தஞ்சுக்கு வரவேண்டிய ரெயில். எப்போது வரும்? அவர் சென்ட்ரலை அடைந்த போது 'ஒரு மணி நேரம் தாமதம்' என்று கரும்பலகையில் எழுதி இருந்தது. இப்போது அதற்கு மேலும் பத்து நிமிடங்களாகி விட்டன.

திடீரென்று மைக் அலறியது.

'தாதர் இன்னும் சில நிமிடங்களில் நான்காவது பிளாட்பாரத்தில் வந்து சேரும்.'

சாம்பசிவம் தன்னைத் தயார் செய்து கொண்டார். சத்யா சொன்னபடி வரவில்லை. ஆபிஸில் என்ன காரியமோ யார் கண்டார்கள்.

ஓட்டப் பந்தயத்துக்குத் தயாராவது போல போர்ட்டர்கள் பிளாட்பாரத்தின் நீளத்துக்கு உட்கார்ந்ததைப் பார்த்தபோது சாம்பசிவம் வெட்கிப் போனார். அவர் மட்டும்



இன்னும் சிமெண்ட் பெஞ்சியில் அழுந்திக் கிடப்பதா?

''ஏசி ஸ்லீப்பர் ஃபர்ஸ்ட் கிளாஸ் ரெண்டும் கடைசியில இருக்கும் மாமா.''

திடீர்க் குரல் — சத்யாவின் குரல்.

''நீ இப்பத்தான் வர்றியா?''

''நாலே காலுக்கு போன்ல விசாரிச்சேன். ஒன் அவர் லேட்னான்.. ஸாரி, பதிவுக்குரல் சொல்லிற்று. சரின்னு வேலை எடுத்துட்டு அஞ்சே காலுக்குப் புறப்பட்டேன். இங்கே வர்றப்ப அஞ்சரை.''

''எங்கே இவ்வளவு நேரமா இருந்தே?''

''இவ்வளவு நேரம்னா! பதினஞ்சு நிமிஷம்தானே. பிளாட்பார்ம் இன்ஸ்பெக்டர் மணியோட பேசிட்டிருந்தேன். நல்ல மனுஷன். உபகாரி. என் ஃபிரண்ட்...''

''சரி, வா வண்டி வர்றாப்ல இருக்கு!''

''நாம நடப்போம்.. என்ஜினையே காணோம்.''

இருவரும் நடந்தார்கள்.

''எதில வர்றாளோ?''

''ஏசி ஸ்லீப்பராத்தான் இருக்கும்'' என்ற சத்யா, ''நான் அவளை அடையாளம் கூட கண்டு பிடிச்சுக்க முடியாது. சின்ன வயசில, ரொம்பச் சின்ன வயசில பார்த்தது'' என்றான்.

''நான் மட்டும் என்னடா? அவளுக்கு ஏழெட்டு வயசு நடக்கறப்பப் பார்த்தது. அவ அம்மா மாதிரி செக்கச் செவேல்னு இருப்பா. கண் முழி பெரிசா இருக்கும்.''

''யார் கண்டா இப்ப முழி உள்ளே தள்ளியும் போயிருக்கலாம். அதோ ரெயில் வர்றது. டயம் அஞ்சு அம்பத்தஞ்சு.''

''நீ ஃபர்ஸ்ட் கிளாஸ்ல பாரு. நான் ஏசிக்கு முன்னாடி நிக்கறேன்!'' என்றார் சாம்பசிவம்.

ரெயில் மூட்டை மூட்டையாக மனித நெல்லிக்காய்களைக் கொட்டிவிட, அவை விரைந்து மறையலாயின.

ஒரு அழகான பெண்மணி மட்டும் வெளிறிய நீல ஜீன்சும், சிகப்புக் கட்டம் போட்ட ஷர்ட்டுமாய், கருங்கூந்தல் கழுத்தைத் தாண்டிப் போகாதபடி வைத்துக் கொண்டு கீழே ஒரு பெரிய பெட்டியும் கையில் ஒரு சிறு பெட்டியுமாக யாரையோ எதிர்பார்ப்பது போல, ஏசி ஸ்லீப்பர் கோச் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

சாம்பசிவத்தின் கண்ணில் அவள் படவில்லை. தம் தம்பியின் பெண் எப்படிப்பட்ட ஆடை அலங்காரத்தில் இருக்கக்கூடும் என்று அவர் யோசித்துக் கூடப் பார்க்கவில்லை.



''மாமா உங்களுக்கு பத்து அடி தூரத்திலேயே ரேவதி நிக்கறா, தெரியலையா?'' என்று சொல்லிக் கொண்டே சத்யா ஓடோடி வந்தான்.

''இவளாடா... உசரமா கிழங்கு மாதிரி இருக்காளே, என் தம்பி பொண்ணு புடவை கட்டிட்டு தலையைப் பின்னித் தொங்கப் போட்டுட்டு இருப்பான்னு நினைச்சேன்.''

''நான் அவள் அறியாம அவ பக்கமா வந்தேன். வர்றப்ப கீழே நிமிர்த்தி வைச்சிருந்த பெட்டியைப் பார்த்தேன் மாமா. ரேவதின்னு எழுதியிருந்தது.''

''அப்பப் போய் விசாரிக்கட்டுமாடா?''

''விசாரியுங்க. நான் நட்சத்திரம் பார்த்துட்டு நிக்காதீங்க. நானும் உங்க பின்னாலேயே வரேன்'' என்றான் சத்யா.

அவர் முன்னேறி அவள் அருகே வந்தார்.

''ஏம்மா ரேவதி தானே?''

''ஹாய் பெரியப்பா! எப்படி பெரியப்பா என்னை அடையாளம் கண்டு பிடிச்சீங்க... பார்த்து கிட்டத்தட்ட பதினஞ்சு வருஷம் இருக்கணுமே...''

''இவன் சொன்னான்!''

''யார் இவர்? ஐ'ம் ரேவதி பஞ்சநதம்!''

''ஐ'ம் சத்யமூர்த்தி. பஞ்சநதம்ஸ் ஸிஸ்டர்ஸ் சன்.''

''ஓ. யூ ஆர் சத்யா.. நீங்க ஒரு போட்டோவில கூட இருக்கீங்களே...! பெரியப்பா ரெண்டு மூணு வருஷம் முன்னாடி நீங்க இவரோடதானே அப்பாவை மீட் பண்ண பாம்பே வந்தீங்க...?''

''கரெக்ட் மிஸ். ரேவதி... உங்க ஃபாதர்ஸ் ஃப்ரெண்ட் ஒருவர் ஓட்டல் டாஜ்ல எங்க மூணு பேரையும் நிறுத்தி வைச்சு போட்டோ எடுத்தார்...''

''வோ வீ ஆர் கஸின்ஸ்!''

''கரெக்ட்... போவோமா. இவ்வளவுதான் லக்கேஜா?''

''ஆமாம். போகலாம்.''

''சத்யா போர்ட்டரைக் கூப்பிடேன்டா.''

''நோ போர்ட்டர் பெரியப்பா... இவ்வளவு பெரிய பெட்டியை எவ்வளவு எளிதா இழுத்துட்டு வரேன்னு பாருங்க!'' என்ற அவள் பெட்டி அருகே வந்தாள்.

''இழுக்கற வேலையை எங்கிட்ட விடுங்கோ. மிஸ். ரேவதி.''

''ஓகே..'' என்ற ரேவதி, ''நாம ரெண்டு பேரும் கஸின்னு வர்றப்ப மரியாதை அவுட் ஆஃப் ப்ளேஸ் இல்லே.

சத்யா?''

''ஆமாம். ஆனா நீ ஏதேனும் தப்பா நினைச்சுட்டா.''

''கம் ஆன் லெட் அஸ் கோ...''

''ஏன் ரெயில்லே வந்தே... பிளேன் சௌகரியம் இல்லியோ?'' என்றார் சாம்பசிவம் அவளுடைய விரைவான நடைக்கு ஈடு கொடுக்க முயன்று கொண்டே.

இதைக் கவனித்த ரேவதி வேகத்தை மிகவும் அதிகமாகக் குறைத்து நடந்தாள்.

''ஓகே பெரியப்பா? உங்களுக்கு பாவம் மூச்சு வாங்கறது... என்ன கேட்டீங்க? ஹாங் ஏன் பிளேன்ல வரலேன்னு? எனக்கு ரெயில்ல வர ஆசையா இருந்தது. ஊர்கள், மலைகள் வயல்கள் இதெல்லாம் பார்க்கணும் போலப்பட்டது.''

''நீ அமெரிக்காவிலிருந்து வர்றியே, நிறைய லக்கேஜ் இருக்குமேன்னு வேனுக்கு ஏற்பாடு பண்ணினோம்'' என்றார் சாம்பசிவம் ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும்.

ரேவதி சிரித்தாள்.

''நான் என்ன அமெரிக்காவையே காலி பண்ணிட்டு இந்தியாவுக்கு மொத்தமா வந்துட்டேன்னு நினைச்சீங்களா, பெரியப்பா.''

''ஆமாம்மா. பஞ்சநாதம் போனப்ப தலையில இடி விழுந்தமாதிரி இருந்தது. எங்கேயோ பத்தாயிரம் மைலுக்குத் தள்ளி இருக்கிற எனக்கே அப்படீன்னா, கிட்டக்கவே இருக்கிற உனக்கு...''

ரேவதி சிரித்தாள்.

''பெரியப்பா நீங்க ரொம்ப உணர்ச்சி வசப்படறீங்க.. பர்த், டெத்... இதெல்லாம் ரொம்ப காமன். பர்த்துக்கும் டெத்துக்கும் நடுவே ஒரு சின்ன இண்டர்வெல் இருக்கே, அதான் லைஃப், வாழ்க்கை. இதை எப்படி அனுபவிக்கிறோம் என்கிறதுதான் முக்யம். ஆம் ஐ கரெக்ட், சத்யா?''

''இது பத்தி அப்புறமாப் பேசலாம்னு படறது.''

வேன் மெரினா வழியாகவும் சென்றது.

''மெரினா ரொம்ப பியூட்டிஃபுல்லா இருக்கும்னு அம்மா அப்பா சொல்லுவாங்க... என் கண்ணுக்கு எல்லாம் டர்ட்டியாத் தெரியறது. மியாமி பீச் எவ்வளவோ தேவலை...''

''அவங்க பார்த்த காலத்தில பீச் அழகாத்தாம்மா இருந்தது. இப்ப பீச் கடற்கரை இல்லை! கடைக்கரை.. படுக்கரை, மீட்டிங் போடற கரை...''



வேன் வீட்டு முன்னால் நின்றது.

சத்யா கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஆறு நாப்பது.

வாசலில் சாரதம் மட்டுமே நின்று கொண்டிருந்தாள்.

''பெரியம்மாதானே?''

''கரெக்ட்...''

''பெரியம்மா, நான்தான் ரேவதி.''

''தெரியுமே. உள்ளே வா.'' அவளுடைய வார்த்தைகள் உயிரின்றி வருவதாகப்பட்டிருக்க வேண்டும், ரேவதிக்கு.

''ஏன் பெரியம்மா, நான் வந்தது பிடிக்கலையா?''

''சேச்சே. அதெல்லாம் இல்லே ரேவதி. வா, காப்பி கலந்து கொண்டு வரேன்.''

''நோ காப்பி!''

''டீ?''

''நோ டீ!''

''அப்ப என்னதான் சாப்பிடுவே ரேவதி?''

''நான் கோகோ கொண்டு வந்திருக்கேன்.. அதை அப்புறமா சாப்பிட்டுக்கலாம். இப்ப மணி ஏழு ஆகப்போறது. மொதல்ல குளியல்.. அப்புறம்தான் எல்லாம்.''

''உன் இஷ்டம்'' என்றாள் சாரதம்.

''பெரியப்பா!''

''என்ன ரேவதி!''

''பெரியம்மா முகத்திலேர்ந்து ரொம்ப கிளியராத் தெரியறது. நான் திடீர்னு இங்கே வந்தது பிடிக்கலேன்னு. சத்யா – நீ – நீன்னு கூப்பிடறது தப்பு இல்லியே – ஒரு சின்ன ஹெல்ப் பண்ணுவியா?''

''சொல்லு ரேவதி.''

''இந்த மெட்ராஸ்ல தாஜ், சோழா ஷெரட்டன், அடையார் பார்க், இதெல்லாம் ஃபைவ் ஸ்டார் ஓட்டல்கள். சவேரா ஃபோர் ஸ்டார்னு நினைக்கிறேன். உட்லண்ட்ஸ் சௌகரியமா இருக்கும்னு ரெயில்ல வர்றப்ப ஒருத்தர் சொன்னார். நீ எனக்கு உட்லண்ட்ஸ்ல ஒரு ஸூட்டுக்கு ஏற்பாடு பண்ண முடியுமா? பெரியம்மாவுக்கு இஷ்டமில்லாம நான் இருக்கிறது சரின்னு படலே..''

சாம்பசிவம் சாரதத்தை முறைத்துப் பார்த்தார். சத்யாவும் கோபத்துடன் மாமியைப் பார்த்தான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே ரேவதி. நீ யாரு! என் கொழுந்தன் பொண்ணு. எனக்கு காலையிலிருந்தே தலைவலி. ஒத்தைத் தலைவலி. நீ ஓட்டல்ல தங்கப்படாது... இங்கேதான்



இருக்கணும்... உனக்காக வைதேகி, வீரா, சுபா மூணு பேரும் மாடியில ஒரு ரூமைத் தயார் பண்ணிட்டிருக்கா... நீ குளிச்சிட்டு வா.''

''நீங்க கலகலப்பா இல்லேன்னா நான் இடத்தைக் காலி பண்ணிடுவேன் பெரியம்மா,'' என்றாள் ரேவதி. பிறகு, சிறிய பெட்டியைத் திறந்து சோப், டவல் மற்றும் மாற்று உடைகளை எடுத்துக் கொண்டாள்.

''பாத்ரூம் காட்டறேன் வா.. கொஞ்சம் வழுக்கும். ஜாக்கிரதை!'' என்றாள் சாரதம்.

சாரதம் ரேவதியைக் குளியல் அறையில் விட்டுவிட்டு வந்ததும், சாம்பசிவம், ''புத்தசாலிப் பெண். ஒரு வினாடியில் உன் குணத்தைப் புரிஞ்சுக்கிட்டா.. ஏன் இப்படி இருக்கே நீ, சாரதம்?'' என்றார்.

''என்னால பொய்மையாச் சிரிக்க முடியாது!'' என்றாள் சாரதம்.

''என் தம்பி போனப்புறம் அவளும் எனக்கு இன்னொரு பொண்தான். இதை மறக்காதே!''

''அதான் ஏற்கெனவே நீங்க சொல்லியாச்சே?''

''பாபு எங்கே?''

''இன்னும் வரலே.''

''ஆபீஸ்லேர்ந்து பெண்டாட்டியைப் பார்க்கப் போயிருப்பான்!'' என்றார் சாம்பசிவம்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு ரேவதி திரும்பினாள்.

''ஷவர்ல தண்ணி சரியா அடர்த்தியா வரலே... பாதி ஓட்டைகள் அழுக்கில அடைச்சுட்டிருக்கு,'' என்ற அவள், ''என் துணிகளை பாத்ரூம்ல போட்டிருக்கேன். அப்புறமா வாஷ் பண்ணிக்கறேன்... வாஷிங் மெஷின் எங்கே இருக்கு? பாத்ரூம்ல இல்லே...''

''வீட்லேயே இல்லே...''

''என்ன வாஷிங் மெஷின் இல்லியா!'' ரேவதி நீலநிற நைலான்கோட்டில் நின்று ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''எட்டாயிரம் பத்தாயிரம் கொடுத்து வாங்க வசதி இல்லை!'' என்றாள் சாரதம்.

''வசதி ஏற்படுத்தினாப் போறது'' என்ற ரேவதி, தரையில் சப்பணமா உட்கார்ந்து கொண்டு நான்கு அடி நீள, இரண்டரை அடி அகலமுள்ள பெட்டியைத் திறந்தாள்.

''அவங்கள்ளாம் இன்னும் கீழே வரலியா?''

''எவங்க?'' என்றார் சாம்பசிவம்.

''என் கஸின்ஸ், வைதேகி, சுபா... வீர்ராகவன்.''



''அதோ வர்றாங்க.''

மாடியிலிருந்து மூவரும் இறங்கி வந்து கொண்டிருந்தார்கள்.

ரேவதி அவர்களைப் பார்த்தாள், சிரித்தாள்.

''ஐ'ம் ரேவதி... யுவர் கஸின் ஃப்ரம் திஸ்டேட்ஸ்!''

''யூ ஆர் வெல்கம்!'' என்றாள் சுபா.

''க்ளாட் டு ஸீ யு!'' – வைதேகி.

''நாம ரொம்பச் சின்ன வயசில பார்த்துக் கொண்டது...'' என்றான் வீரா.

''நியாயமா நீங்க மூணுபேரும் என்னை வெல்கம் பண்றதாப்படறது!'' என்ற ரேவதி பெட்டி மூடியைத் தூக்கினாள். என்னவெல்லாமோ அடைத்துக் கொண்டிருந்தன.

''பெரியம்மா, இது உங்களுக்கு. மல்டி பர்பஸ் மிக்ஸி. வைதேகி, இது உனக்கு. ஹேர் ட்ரையர். சுபா, இது லேடஸ்ட் காமெரா. ஒரு ரோல் கலர் பிலிம் இருக்கு. வீர்ராகவன் இது கம்ப்ளீட் டாய்லெட் ஸெட்... ஃ ஹண்ட்ரண்ட் பிளேட்ஸ், யுடிகோலோன், ஆஃப்டர் ஷேவ் லோஷன், எக்ஸட்ரா எக்ஸட்ரா. பாபுவுக்கும் இதே மாதிரி ஒரு ஸெட். அப்புறம் இந்தப் பாக்கெட்ல கலிபோர்னியா ஆர்மண்ட்ஸ். இதோ இதில ஏழெட்டு டீ ஷர்ட்ஸ், இதில அமெரிக்கன் தூர்ஜட்... எல்லாம் அஞ்சரை மீட்டர். பத்து இருக்கு. எப்படி வேணும்னாலும் பிரிச்சு எடுத்துக்கலாம். பெரியப்பா ரொம்ப ஸாரி.. உங்களுக்குன்னு நான் எதுவும் வாங்கிட்டு வரலே. என்ன வாங்கறதுன்னு தெரியலே...''

சத்யா சிரித்தான்.

''எனக்கும் எதுவும் நீ வாங்கி வரலே, ரேவதி.''

''நீ இங்கே இவங்களோடதான் இருக்கேன்னு எனக்குத் தெரியாது?''

''இட் இஸ் ஆல் ரைட்..''

''ஹாங், மறந்தே போயிட்டேன், பெரியம்மா, அமெரிக்கன் டயமண்ட்ஸ் அப்புறம் அரை கிலோ கோல்ட் கொண்டு வந்திருக்கேன்.. கஸ்டம்ஸ்ல கொஞ்சம் டியூட்டி போட்டா.. மொத்தம் நூறு டயமண்ட்ஸ்..''

அசந்து போன சாரதம் அவள் நீட்டிய வைரங்களைப் பார்த்தாள். தங்க பிஸ்கட்டுகளை சாம்பசிவம் பார்க்க, கண் கூசியது. அரை கிலோ தங்கம் ரொம்ப. இன்றைய விலை கிட்டத்தட்ட கிராம் நானூறு ரூபாய். நூறு என்றால் இரண்டு லட்சம்! சாம்பசிவத்துக்கு மயக்கம் வந்தது. ரேவதி

எழுப்பினான்.

''பெரியப்பா!''

''என்ன ரேவதி.''

''ஒரு பிஸ்கட்டைக் கொடுங்க.''

கொடுத்தார்.

''சத்யா, இது என்னுடைய அன்பளிப்பு.''

''சாதாரண பிஸ்கட்டா இருந்தாத் திங்கலாம். இதை வைச்சுட்டு நான் என்ன செய்வேன், ரேவதி?''

''உங்க மனைவிக்கு...''

''கலியாணம் ஆகலே..''

''எதிர்கால மனைவிக்கு நகை பண்ணிப் போடலாமே!''

''அப்ப சரி!'' கை நீட்டி வாங்கிக் கொண்டான். பிறகு, ''சுபா!'' என்று அழைத்தான்.

''என்ன சத்யா?''

''இப்ப ரேவதி சொன்னது காதில விழுந்தது, இல்லியா?''

''அதற்கென்ன?''

''இந்தா இது உனக்கு.''

ரேவதி திடீரென்று சிரித்தாள்.

''லோ யூ ஆர் எங்கேஜ்ட்!''

''கரெக்ட்.. ஆனா நாங்க எங்கேஜ்டாகி என்ன புண்ணியம்?'' –சத்யா.

''ஏன்..?''

''நான் இன்னும் சிங்கிளா இருக்கேனே!'' என்றாள் வைதேகி.

ரேவதி பதில் சொல்லவில்லை.

''நீ மாடிக்கு வந்தால் உன் ரூமைக் காட்டுவேன்!'' என்று சுபா கூறினாள்.

''இந்த வீட்டு மாடியில எத்தனை ரூம் இருக்கு?''

''ரெண்டு. ஒன்ல நான். இன்னொன்ல இவ. வீராவோட அலமாரியும் புஸ்தகங்களும் என் ரூம்லதான் இருக்கு.''

''கீழே?''

''ஒண்ணே ஒண்ணு.. அதில பாபுவும் அவன் ஒய்ஃபும்...''''

''நான் ஒரு ஃபூல்! மிஸர்ஸ் பாபுவுக்கு ஒண்ணுமே வாங்கிட்டு வரலே.. எங்கே அவ?''

''அம்மா வீட்ல இருக்கா.'' –சுபா.

''எப்ப வருவா?''



''கடவுளுக்குக் கூடத் தெரியாது.''

''இன் லா ப்ராப்ளமா?'' ரேவதி சிரித்தாள். பிறகு, ''பாபு எங்கே?'' என்றாள்.

''இன்னும் ஆபீஸ்லேர்ந்து திரும்பலே.''

''இன்னும் திரும்பலேன்னா பாபு ஒய்ஃபை மீட் பண்ணப் போயிருக்கணும்,'' என்றாள் ரேவதி.

''மாடிக்குப் போவோமா?''

''நான் இங்கேயே ஹால்லேயே இருந்து கொள்றேன் சுபா... உங்க ரெண்டு பேரையும் டிஸ்டர்ப் பண்ண எனக்கு இஷ்டமில்லே...''

''இங்கே கட்டில்கூட இல்லை.''

''பெரியம்மா எங்கே தூங்கறா?''

''இந்த ஹால்ல அந்தக் கோடியில.''

''நானும் இங்கேயே தூங்கிக்கறேன். பெரியப்பா நீங்க?''

சத்யா, ''நானும் பெரியப்பாவும் திண்ணையில'' என்றான்.

''நான் மாடி ஹால்ல..'' என்றான் வீரா.

''இன்னொரு மாடி கட்ட முடியாதா?''

''ஏன் முடியுமே..! சிமெண்ட், ஸ்டீல், டிம்பர் இதெல்லாம் இருந்து நல்ல மேஸ்திரி ஒருத்தனும் கிடைச்சுட்டா ஈஸியா கட்டிடலாம். ஆனா அதுக்கு இன்னொண்ணு முக்கியமா தேவைப்படறது. உங்க ஊர்ல டாலர். இந்த ஊர்ல ரூபாய்!'' என்றான் வீரா.

ரேவதி சிரித்தாள்.

வைரமும் தங்கமும் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் ''நீ கட்டாந்தரையில படுத்துப் பழக்கப்படாதவள், ரேவதி! மாடியில சுபா ரூம்ல உனக்காக கட்டில் மெத்தை எல்லாம் ரெடியா இருக்கு,'' என்றாள் சாரதம்.

''நோ பெரியம்மா.. நான் இங்கேதான் தூங்கப் போறேன். நீங்க பெரிசா குறட்டைவிட மாட்டீங்களே?''

ரேவதி சிரிப்பதற்கு முன்பாகவே, எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள்.





# 4

மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்கு, இருபத்தெட்டு அல்லது முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் கேட்டைத் திறந்து கொண்டு வருவதை ரேவதி பார்த்தாள். யார் இவள் என்ற கேள்வி எழுந்த கணத்திலேயே பாபுவின் மனைவியாக இருக்கக்கூடும் என்ற ஊகமும் பிறந்தது. வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை. பெரியம்மா ஒரு அவசர காரியமாக மயிலாப்பூர் மாட வீதி வரை போய் வருவதாகக் கூறிவிட்டு இரண்டே முக்கால் மணிக்குப் போனாள். நுங்கம்பாக்கத்தில் ஒரு வீட்டின் விற்பனை விஷயமாக பெரியப்பா மதிய உணவை முடித்த கையோடு புறப்பட்டுப் போனார். சுபா கூர்லுலோ சாலையில் ஒரு பேராசிரியைப் பார்க்கக் காலையிலேயே சென்றாகிவிட்டது. வைதேகி ஆபீஸ் போய்விட்டாள். பாபு, வீரா மற்றும் சத்யா தத்தம் அலுவலகங்களுக்குப் போயிருக்கிறார்கள்.

திண்ணையில் நின்று கொண்டிருந்த ரேவதி, அப் பெண் நெருங்கி வருவதைக் கண்டு ஒரு கணம் யோசித்தாள். பிறகு, ''யார் நீங்க?'' என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பாராத பெண் துணுக்குற்றாள். கோபம் மின்னலாய் முகத்தில் பளிச்சிட்டது.

''நீ யார்னு எனக்குத் தெரியும், ஆனா நான் யார்னு உனக்குத் தெரிய நியாயமில்லை. நான் சாந்தா, மிஸர்ஸ் பாபு.'' என்றாள் அவள்.

''ஓ, ஐ ஸீ!'' என்ற ரேவதி, அவள் படியேறும்வரைக் காத்திருந்தாள். பிறகு, ''என்ன வேணும்?'' என்று கேட்டாள்.

''நான் என் கணவன் வீட்டுக்கு வர்றேன். என் புகுந்த வீட்டுக்கு வர்றேன்... என்ன வேணும்னு கேட்கிறாயே? இதான் உன் அமெரிக்க நாகரிகமா?''

ரேவதி கலகலவென்று சிரித்தாள்.

''உன்னைப் பத்திக் கேள்விப்பட்டேன்.''

''என்னென்று?''

''இங்கே இருக்கிறவங்கிட்ட, அதுவும் முக்கியமா



மாமியார்ட்ட முரண் பிடிச்சுட்டு நீ அடிக்கடி உன் பிறந்த வீட்டுக்கு மூட்டை கட்டுவாயாமே!''

''இட் இஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்.''

''அஃப்கோர்ஸ் இட் இஸ் நௌ மை பிசினஸ்... அமெரிக்க நாகரிகத்தில, கலியாணமானதும் பெண் புருஷனோட தனி வீடு பார்த்துக்கிட்டுப் போயிடுவா. மாமியார் – மாமனார் வீட்டுக்கு அப்பப்ப குசலம் விசாரிக்க வருவா. மாசத்துக்கு ஒருதடவை, முன்கூட்டியே அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணிட்டு லஞ்சுக்கோ, டீக்கோ, டின்னருக்கோ வருவா. இது உனக்கு புகுந்த வீடா இல்லை, இஷ்டப்பட்டப்ப தங்கற சத்திரமா இருக்கு.''

''இதையெல்லாம் சொல்ல நீ யார்?''

''ஐ'ம் ரேவதி பஞ்சநதம்.''

''உன் பெயரைக் கேட்கவில்லை.''

''அப்ப உரிமையைக் கேட்கிறாயா? நான் இந்த வீட்டு ஓனர்!''

''நான்சன்ஸ்.''

''மாமனார் வீடுன்னு நினைச்சுட்டுப் பொருமறியா? உனக்கு மனசில திராணியும் உடம்பில சூடும் சுரணையும் இருந்தா நீ தனிக் குடித்தனம் போ! ராத்திரி பெரியப்பா சொன்னார், நீயும் பாபுவும் மாசாமாசம் ஐயாயிரத்து எண்ணூறு கொண்டு வர்றீங்களாம். ரெண்டு பேர் செலவுக்குன்னு ஆயிரமோ ஆயிரத்து இருநூறோ பிச்சை போடறீங்களாம்.. பாக்கியைப் பாங்கில போட்டு பாஸ் புக்மேல உட்கார்ந்துக்கறீங்களாம்.''

''இது எங்க குடும்ப விஷயம்..''

''இப்ப நானும் குடும்பத்தில ஒருத்தி. மத்த எல்லாரையும்விட கேட்கிற அதிகாரம் எனக்கு இருக்கு!''

''நான்சன்ஸ்.''

''வேற வார்த்தையே தெரியலையா?''

''உன் மனசில என்ன நினைச்சிட்டிருக்கே நீ? உன் திமிரை அமெரிக்காவிலேயே வைச்சுக்க.''

''என் திமிர் நான் போற இடத்துக்கெல்லாம் என் கூடவே வரும். நீ மறுபடியும் இந்த வீட்ல தங்கணும்னா, நான் சில கண்டிஷன் போடுவேன்.''

''சபாஷ்! கண்டிஷன் போடுவியா? என்ன அது?''

''மாசம் நாலாயிரம் வீட்டுச் செலவுக்குக் கொடுக்கணும். இது நம்பர் ஒன். நம்பர் டூ, நீ பெரியம்மாவுக்கு கார்த்தாலே முடிஞ்ச வரைக்கும், சாயங்காலம் பூராவும் சமையல் வேலையில் உதவி செய்யணும். நம்பர் த்ரீ, நீ உன் இஷ்டத்துக்கு மாமியார்ட்ட கோபிச்சுக்கிட்டு பிறந்த வீட்டுக்கு ஓடக்கூடாது...''





''எனக்கு வர்ற கோபத்துக்கு..''

''உன்னால எதுவும் செய்ய முடியாது. இப்ப இந்த வீட்டு வாடகை மாசம் மூவாயிரம் ரூபா. என்ன சொல்றே?''

''நீ சொல்லி நான் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லே!''

''அப்ப யார் சொன்னாக் கேட்பே?''

''யாரும் சொல்லவும் மாட்டா. நான் கேட்கவும் மாட்டேன்!''

''மை டியர் சாந்தா, நீ உன் மூக்கு நுனிக்குள்ளேயே வட்டமிடறே.. முதல்ல நீ... அப்புறம் சத்யா.''

''அப்புறம் வைதேகி... அதுக்கு அப்புறம்...''

''கரெக்ட்.. இன்னும் கொஞ்ச நாள்ல வைதேகிக்குக் கலியாணம் ஆயிடும். அப்புறம் பாபுவுக்கும் சத்யாவுக்கும் மாரேஜ். வீரா எப்ப வேணும்னாலும் வேலை மாறி வெளியூர் போயிடுவான். அப்புறம் இந்த வீட்ல யார் இருப்பா சொல்லு! பெரியப்பா, பெரியம்மா. அப்புறம் நான்.''

''திட்டம் போட்டுத்தான் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டியா?''

''கரெக்ட். திட்டத்தை எழுதியே வைச்சிருக்கேன். காட்டட்டுமா?''

''அதோ என் மாமியார் வர்றா. அவகிட்ட உன் திட்டத்தைப் படிச்சுக் காட்டு!'' என்றாள் சாந்தா.

சாரதம் மாடவீதிக் காரியத்தை முடித்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். பஸ்ஸில் செல்ல முடியாத இடத்தில் வீடு இருக்கிறது. போகும்போது ரிக்‌ஷாவுக்கு ஏழு ரூபாய் அழுதாகிவிட்டது. இன்னொரு ஏழு ரூபாயைத் தூக்கி எறிய மனம் வரவில்லை. நடக்கலானாள்.

ரேவதி மனத்தில் அமர்ந்து கொண்டாள்.

நேற்று இரவு அவளும் ரேவதியும் நீண்ட நேரம் பேசிக் கொண்டார்கள். முப்பதை நோக்கித் தள்ளாடிக் கொண்டிருக்கும் வைதேகிக்கு, முப்பத்தைந்து வயதான ஒரு பேராசிரியர் அமெரிக்காவில் இருப்பதாகவும், தன் அப்பாவுக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்றும், நிச்சயமாக அவனுக்கு வைதேகியைப் பிடித்துப் போகும் என்று கூறிய அவள், அந்த புரொபசர் சார்நாத் இன்னும் இரண்டு வாரங்களில் சென்னை வரப் போவதாகவும் சொன்னாள். அவனுடைய அம்மா தன் பெண்ணுடன் அண்ணா நகரில் இருப்பதாகவும் கூறினாள். வரதட்சணை பற்றியோ, கலியாணச் செலவு பற்றியோ



பெரியப்பா கவலைப்பட வேண்டாமென்றும் சொன்னாள். கேட்கக் கேட்க சாரதத்துக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வைதேகியின் கலியாணம் நடக்க கற்பகாம்பாள் அருள் புரியவேண்டும் என்று மனதார வேண்டிக் கொண்டாள்.

வைதேகிக்குப் பிறகு பேச்சில் பாபுவும் சாந்தாவும் வந்தார்கள்.

''பெரியம்மா, பெரியப்பாவுக்கு இப்ப வயசு அறுபது ஆகப் போறது. இனிமேலும் அவர் கையில் குடை எடுத்துக் கொண்டு ஹவுஸ் ப்ரோக்கர் தொழிலுக்கு ஓடணுமா? நான் ஒரு லட்சமோ ரெண்டு லட்சமோ முதல் போடறேன். இந்த வீட்டு மாடியை ஆபீசாக்கிடலாம். என் அப்பா பெயர்ல 'பஞ்சநதம் ரியல் எஸ்டேட்'னு வியாபாரத்தை ஆரம்பிக்கட்டும். வீட்ல போன் இருக்கவே இருக்கு. நிலங்களை மத்தவங்களுக்கு வாங்கிக் கொடுக்கறதுக்கு பதிலா அவரே ஒரு தொகையை அட்வான்சாக் கொடுத்து ஆறுமாசம் டயம் கேட்கட்டும் அப்புறம் அவரே நிலத்தில லே அவுட் போட்டுட்டு, ஃப்ளாட் கட்டறதா ஹிந்து பேப்பர்ல விளம்பரம் கொடுக்கட்டும். அடுத்த வருஷமே இந்த வீட்ல எல்லார்க்கும் தனித்தனி ஃப்ளாட் கிடைக்கும் பாருங்க'' என்றாள். சாரதம் திக்கு முக்காடிப் போனாள். ஏன் இந்தமாதிரி எண்ணம் கணவருக்கோ மற்றவர்களுக்கோ வரவில்லை?

ரேவதி தொடர்ந்தாள்.

''இந்த வீட்ல ரெண்டு என்ஜினியர்கள் இருக்காங்க. ஒண்ணு வீரா. இன்னொண்ணு சத்யா. சொல்லப் போனா, வீரா சிவில் என்ஜினியர். சத்யா ஆர்க்கிடெக்ட். இந்த ரெண்டு பேரும் பெரியப்பாவும் வியாபாரத்தில கூட்டாளியா இருக்கட்டும். இந்த ஐடியாவெல்லாம் என் மனசில உதிச்ச ஐடியான்னு தப்புக் கணக்கு போடாதீங்க. ரொம்ப நாளா அப்பா சொல்லிட்டிருப்பார். அண்ணா குடும்பத்துக்கு ஏதாவும் செய்யணும்னு. முதற் காரியமா, இந்த வீட்டை அண்ணா பெயருக்கே மாத்தணும்'னு. இப்ப மாத்தற உரிமை எனக்கு இருக்கு பெரியம்மா, மாத்திடறேன்.''

''ரேவதி நீ என்ன சொல்றே.. இந்த வீடு உன் பெரியப்பா பேர்லேதானே இருக்கு! எலக்ட்ரிசிட்டி கார்ட்ல உன் தாத்தா பேர்லதானே இன்னும் இருக்கு?''

''அதை இன்னும் மாத்தலே.. அப்பா கடைசியா வந்தப்ப பெரியப்பாவின் பணக் கஷ்டத்தைப் பார்த்து, லட்சம் ரூபாய் கொடுத்து, அவருடைய பங்கைத் தன் பெயருக்கு மாத்தியாச்சு. டாகுமெண்ட் ரிஜிஸ்டரும் ஆயாச்சு.''

''இது எனக்குத் தெரியவே தெரியாதே.. பித்ரார்ஜிதமா வந்த வீடு அண்ணன் தம்பிகளுக்கு சமபாகமா



இருக்குன்னுதானே நினைச்சுட்டிருந்தேன், இத்தனை நாளா?''

''இது பத்தி நீங்க பெரியப்பாகிட்ட பேசப்படாது பெரியம்மா. விஷயத்தை உங்களுக்கு தெரியாம மறைச்சு வைச்சதுக்கு நீங்க அவர்ட்ட கடுமையா நடந்துக்கப்படாது.''

சாரதம் மௌனத்தில் உறைந்து போனாள்.

''அப்புறம் பாபு!''

''அவனுக்கு என்ன ரேவதி?'' என்று சாரதம் கேட்டாள்.

''பாபுவுக்குக் கலியாணமாகி நாலு வருஷம் ஆறது. இந்த வீட்டுக் கூட்டத்தில் அவனும் அவன் ஒய்ஃபும் இருக்கிறது நல்லது இல்லை. இப்படியே தொடர்ந்து இருந்தால் ரெண்டு பேருக்குமே பொறுப்பு வராது.''

''அதனாலே.. நீ என்ன சொல்ல வர்றே, ரேவதி!''

''தனிக் குடித்தனம்.''

''பாபு மாட்டேம்பான். சாந்தா பத்ரகாளியா ஆடுவா.''

''நான் பார்த்துக்கறேன் பெரியம்மா.''

''மெட்ராஸ்ல வீடு லேசில கிடைக்காது. கிடைச்சாலும் ரெண்டாயிரம் மூவாயிரம் வாடகை கேட்பா.''

''ஆயிரத்து ஐநூறு கொடுக்கட்டும்.''

''வீடு!''

''இதே அண்ணாமலைபுரத்தில, இதே ஆறாவது மெயின்ல ஒரு வீடு இருக்கு. ரெண்டு மாடி. முதல் மாடியில குடித்தனம் இருக்கு. மாடியில ரெண்டு பெட்ரூம் ஹால், கிச்சன். ஆயிரம் சதுர அடி!''

''யார் வீடு?''

''வெட்டர்னரி டாக்டர் கைலாசம் இருக்கிற வீடு.''

''உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும், ரேவதி? இன்னிக்குத்தான் அமெரிக்காவிலிருந்து நீ வந்திருக்கே. ரொம்ப காலமா மெட்ராஸ்ல இருக்கிற மாதிரிப் பேசறே?''

''கடைசியா அப்பா வந்தப்ப இந்த வீட்டை வாங்கினார்.''

''அப்படியா? எனக்குத் தெரியவே தெரியாதே?''

''சத்யாவுக்கு மட்டும்தான் தெரியும். யார்ட்டேயும் மூச்சு விடப்படாதுன்னு அப்பா அவன்ட்டே சொல்லியிருந்தார். என்னிக்காவது இந்தியாவுக்குத் திரும்பினா தங்கறதுக்கு வீடு வேணுமே? பழைய சொந்தக்காரர் டாக்டர் கைலாசம் நாலு லட்சம் ரூபாய்க்கு வித்துட்டு, அதிலேயே மூவாயிரம் ரூபாய்

வாடகைக்கு குடியிருக்கார், பாபுவுக்கு கன்சஷன். அதில பாதி கொடுத்தாப் போதும். அந்த வாடகையை சத்யா வாங்கி பாங்க்ல கட்டுவான்.''

''இது பத்தியெல்லாம் நீ ஏற்கெனவே அவன் கூடப் பேசியாச்சா?''

''மாசத்துக்கு ஒரு தடவை சத்யாவோட அப்பா போன்ல பேசவார்ல ஆபீஸ்ல. அப்பாவுக்கு இதைத் தவிர மகாபலிபுரம் போற ரோட்ல, உத்தண்டியில பத்து ஏக்கர் தோட்டமும் இருக்கு!''

''எல்லாமே ராமாயணமா இருக்கு எனக்கு, ரேவதி.''

''அப்பா திடீர்னு ஹார்ட் அட்டாக்ல போயிருக்க வேண்டா வருஷா வருஷம் ஒரு மாசமாவது இந்த உத்தண்டி தோட்டத்தில தங்கி இருப்பார். ஒரு நாள் நான் அதைப் போய்ப் பார்க்கணும். ஐநூறு தென்னை, இருபது மா, முப்பது நாப்பது சப்போட்டா எல்லாம் பணத்தைக் கொழிக்கறது!''

''இதுவும் சத்யாவின்...''

''ஆமாம். சத்யாதான் அப்பாவோட இண்டியன் ஏஜண்ட்!''

''மாசத்துக்கு ரெண்டு வாட்டி, ஞாயித்துக் கிழமைகள்ல காலங்காத்தால ஸ்கூட்டர்ல போவான். திரும்பி வர்றப்ப சாயங்காலம் ஆயிடும். இது வரையில் ஒரு தேங்கா, ஒரு மாங்கா, ஒரு சப்போட்டாகூட தோட்டத்திலேந்து கொண்டு வந்ததில்லே... சரியான கல்லுளி மங்கன்.''

''அப்படிக் கொண்டு வந்திருந்தா நீங்க கேள்வி கேட்பீங்க.. பதில் சொல்லத் திண்டாடுவான். சத்யா பொய்யே பேசமாட்டான் என்கிற அபிப்பிராயம் அப்பாவுக்கு உண்டு.''

''இவ்வளவு சொத்துக்களை நீ இங்கே வைச்சுக்கிட்டு அமெரிக்காவில எவ்வளவு காலம்தான் இருப்பே, ரேவதி?''

''இதுபத்தி நான் இன்னும் ஒரு முடிவுக்கு வரலே, பெரியம்மா!''

''நீ இப்ப எங்களுக்கெல்லாம் ஒரு அதிர்ஷ்ட தேவதையா வந்திருக்கே, ரேவதி. சத்தியமாச் சொல்றேன், நீ வர்றதுக்கு முன்னாடி என் மனசில ஒரே வெறுப்பா இருந்தது. வீட்ல இவ்வளவு சுமை இருக்கறப்ப இன்னொரு சுமையான்னு எரிச்சல்கூட வந்தது.''

''உங்க சுமையைக் குறைக்கத்தான் நான் வந்திருக்கேன் பெரியம்மா. மொதல்ல பாபு – சாந்தாவை வெளியே அனுப்பிவோம்.''



''அது என்னால முடியாத விஷயம்?''

''எங்கிட்ட விட ரெடியா, பெரியம்மா?''

''நான் குறுக்கே வரமாட்டேன். உன் பெரியப்பாவும் வராம நான் பார்த்துக்கறேன். போதுமா?''

''போதும். ஆனா எப்ப சாந்தா வருவா?''

''தெரியாது.''

''வரவழைக்க ஒரு வழி இருக்கு, பெரியம்மா.''

''என்ன அது?''

''அமெரிக்கன் ஜார்ஜட்.''

''புரியலே.''

''பாபுகிட்ட சொல்றேன், 'உன் ஒய்ஃப் வந்து அவளுக்குப் பிடிச்ச ரெண்டு புடவைகளை எடுத்துக்கட்டும்'னு பாபு அவகிட்ட சொல்லுவான். நீங்க வேணும்னா பாருங்க, அவ நாளைக்கு சாயங்காலமே வந்து நிப்பா!''

சாரதம் சிரித்தாள்.

முந்தின இரவு பேசிய பேச்சுக்களையெல்லாம் நினைவு கூர்ந்து கொண்டே வந்த சாரதம், வீட்டு காம்பவுண்டு கேட்டைத் திறக்கையிலேயே சாந்தா நிற்பதைப் பார்த்து விட்டாள்.

இந்த ரேவதி சாமர்த்தியமும் சாதுரியமும் நிறைந்த பெண்தான் என்ற அபிப்பிராயம் அவள் மனத்தில் மேலோங்கி நின்றது.



# 5

சாரதம் படி ஏறி வந்ததுமே மருமகள் சாந்தா வீரிட்டாள்.

''யார் மாமி இந்த பண்டைக் கனம் பிடிச்ச பொண்ணு?''

''ஓ, நீ வந்துட்டியா சாந்தா? ஆபீஸ் இல்லியா?''

''உங்க புள்ளைதான் வரச் சொன்னார். அரை நாள் லீவு.''

''என் பிள்ளை சொல்லி நீ எதையும் கேட்டதா சரித்திரம் இல்லியே!'' என்றாள் சாரதம் நக்கலுடன்.



''எனக்கு இஷ்டமே இல்லை.. ஆனா அவர் வற்புறுத்தினார். தன்னோட சித்தப்பா பொண்ணு ஸ்டேட்ஸ்லேர்ந்து வந்துவிட்டதாகவும் என்னைப் பார்க்க ரொம்ப ஆர்வமும் ஆவலுமாக இருப்பதாகச் சொன்னார். இங்கே வந்தா வீட்ல இந்த வங்கிணி மட்டும்தான் இருக்கா.''

''ஏய், என்ன சொன்னா?''

''நானும் அவரும் இந்த வீட்டை விட்டுத் தனிக் குடித்தனம் போய்த் தொலையணுமாம்.''

''இவ யார் அதைச் சொல்றதுக்கு?'' கேட்டு விட்டு சாரதம் ரேவதியைப் பார்த்துக் கண் சமிக்ஞை செய்தாள். ரேவதியும் புரிந்து கொண்டு வாய்க்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

''அதான் புரியலே. என்ன உரிமைன்னு கேட்டா, 'நான் இந்த வீட்டு ஓனர்'ங்கறா.''

''அது என்னமோ உண்மைதான் சாந்தா! யார் கண்டா, என்னையும் உன் மாமனாரையும் கூட குடும்பத்தோட வெளியேறச் சொன்னாலும் சொல்லுவா. நீ இப்போதைக்குப் பேசாம இரு. பாபு ஆபீஸ்லேர்ந்து வரட்டும்... ஏம்மா ரேவதி, சாந்தாவுக்கு ஜார்ஜட் புடவைகளைக் காட்டினாயா? அவளுக்கும் ஒண்ணோ ரெண்டோ கொடுக்கணும். பாபு ஸ்ப்ரே தானும்னைல்லாம் நேத்து சொல்லிட்டிருந்தியே!''

''பெரியம்மா, அது நேத்து சொன்ன கதை... மாமனார் மாமியாரைத் தச்சமா மதிக்க நடக்கறவங்களுக்கு எனக்கு எப்பவுமே அன்பு அபிமானம் இதெல்லாம் இருக்காது.''

''ஆமாம், உன் பெரிய அன்புக்கும் அபிமானத்துக்கும் தான் நாங்க ஏங்கிட்டிருக்கோமாக்கும்!''

''பெரியம்மா இவ பேசறதைக் கேட்கறப்ப, ஜார்ஜட் புடவை, அமெரிக்கன் வைரம், அப்புறம் ஜெண்ட் சோப் இதெல்லாம் இவளுக்குத் தேவை இல்லைன்னு தெரியுது... சரி நீங்க ரெண்டு பேரும் என்னைப் பத்தி என்னவெல்லாம் பேசணுமோ அதையெல்லாம் பேசிட்டிருங்கோ... நான் வெளியே போயிட்டு வரேன். இன்னும் கால்மணி நேரத்தில கார் வந்துடும்.''

''காரா?'' என்றாள் சாரதம்.

''ஆமாம், சத்யாகிட்ட காலையில சொல்லி வைச்சிருந்தேன். ரெண்ட் காருக்கு ஏற்பாடு செய்துடறேனான். இவ வர்றதுக்கு பத்து நிமிஷம் முன்னால போன் வந்தது. கார் வரும்னு.''



''எங்கே போகலாம்னு இருக்கே?''

''அது என் சொந்த விஷயம், பெரியம்மா! உங்க மருமகள் முன்னாடி சொல்ல விருப்பம் இல்லே, அப்புறம் தனியா உங்ககிட்ட சொல்றேன்!''

''ஏன் இப்பவே சொல்லேன்... நான் மாடிக்குப் போயிடறேன்.'' என்றாள் சாந்தா.

''பாவம் நீ... இத்தனை நேரமாக் கால் கடுக்க நிக்கறே... மாடிப்படி ஏறினா அது ரொம்ப வலிக்கும்!''

சொல்லிவிட்டு குளியல் அறையை நோக்கி ரேவதி நடந்தாள்.

ரேவதி வீடு திரும்பிய போது இரவு மணி ஒன்பது. காரிலிருந்து அவளுடன் வீராவும் இறங்கினான்.

''வீரா நீ எப்படி...?'' என்று வைதேகி இழுத்தாள்.

''நான்தான் வீரா ஆபீசுக்குப் போய் கார்ல தூக்கிப் போட்டுக்கிட்டு ஊர் சுத்தக் கிளம்பினேன்.''

''என்னடா வீரா, என்ன விஷயம்?'' என்றார் சாம்பசிவம்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை அப்பா! மெட்ராஸ்ல மாடர்னா கட்டியிருக்கிற சில அபார்ட்மெண்ட்டைப் பார்க்கணும்னு சொன்னா. எங்க கம்பெனி கட்டியிருக்கிற ஏழெட்டு கட்டிடங்களைக் காட்டினேன். சில பில்டிங்ஸ் அமெரிக்காவில இருக்கிற மாதிரியே இருக்குன்னா!''

கார் மறுபடியும் மறுநாள் காலை ஒன்பது வரவேண்டும் என்று டிரைவரிடம் சொல்லி, டிப்ஸ் கொடுத்தும் அனுப்பிவிட்டு ரேவதி ஹாலில் கும்பலில் கலந்து கொண்டாள்.

''வீரா நீயும் ரேவதியும் சாப்பிட உட்காருங்க.''

''சாப்பிட்டாச்சு.''

''எங்கேடா?''

''உட்லண்ட்ஸ்!'' என்றாள் ரேவதி. பிறகு, ''பெரியம்மா, இப்ப நான் விட்ட இடத்திலிருந்து தொடரப் போறேன்!''

''நாம என்ன பேசிட்டிருந்தோம்னு இவங்களுக்கெல்லாம் தெரியாது. அதனால முதல்லேர்ந்தே சொல்லு ரேவதி!''

பாபு முன்னேறி வர, சாந்தாவும் அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

''தேவை இல்லை அப்பா! நானும் இவளும் தனியாப் போகணும். அவ்வளவுதானே?''

''அவ்வளவே தான்!'' என்ற ரேவதி தொடர்ந்தாள்.

''இந்த வீட்ல எல்லாருக்கும் ஒரு உண்மை தெரியாது. அதை ஆரம்பமாச் சொல்லி என் திட்டத்தை விளக்கிடறேன்!''

வைதேகி, வீரா மற்றும் சுபா வியப்புடன் ரேவதியைப் பார்த்தார்கள்.

''இப்ப இந்த வீடு என் வீடு. அட்வகேட் புஜங்கராவ்தான் செட்டில்மென்ட் டீட் எழுதினார். மயிலாப்பூர் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல பதிவும் ஆகியிருக்கு. எப்படி இந்த வீடு என் அப்பா பெயருக்கு வந்து அப்புறம் எனக்குச் சொந்தமாச்சு அப்படீங்கறதை விளக்க அவசியம் இல்லை. பெரியப்பாவிடம் கேட்டுத் தெரிஞ்சுக்குங்க... சத்யாகிட்ட காலையில கேட்டேன், வாடகைக்கு விட்டா மாசம் எவ்வளவு வரும்னு. ஆயிரக் கணக்கில சொன்னான். இந்தப் பழைய வீட்டை புதுப்பிச்சு, இன்னொரு மாடியும் கட்டினா, பெரிய கம்பெனிகள் கண்ணை மூடிக்கொண்டு பத்தாயிரம் தருவா. கம்பெனியோட அஞ்சு வருஷ லீஸ்... ஆனா அப்படிச் செய்ய இப்ப எனக்கு விருப்பம் இல்லே. அதே சமயத்தில என் உரிமையையும் நிலை நாட்டலாம்னு இருக்கேன். முதற்படியா, பாபுவும் சாந்தாவும் தனியாப் போகணும்.''

சாரதம், சாந்தா மற்றும் பாபுவைத் தவிர மற்ற எல்லோரும் வாயடைத்து நின்றார்கள்.

பெரியப்பா முதலில் பேசினார்.

''அவசியமா ரேவதி?''

''ரொம்ப. ரெண்டு பேரும் கை நிறையச் சம்பாதிக்கறாங்க...''

''அப்பா, திடீர்னு நான் வெளியேறணும்னு இவ சொல்லிட்டா. நான் எங்கே போறது? வாடகை வீடுன்னாக்கூட நோட்டீஸ் கொடுப்பாங்க.''

''நீ வாடகைக்கு இருந்தா நானும் நோட்டீஸ் கொடுத்திருப்பேன். நீ ஓசியிலதானே இருக்கே, பாபு.''

''திடுதிப்னு சொன்னா எங்கே போறது?''

''உன் மனைவிதான் பாதி நாள் பெரியம்மாகிட்ட ரகளை பண்ணிட்டு பிறந்த வீடு போயிடறாளே? நீ அவ வீட்ல கொஞ்ச நாள் இருந்திட்டு வீடு மாறிப் போ!''

''இந்த மைலாப்பூர்ல சௌகரியமா இருக்கணும்னா மாசம் ரெண்டாயிரம் ரூபா வாடகை கொடுக்கணும். அமெரிக்கால இருக்கிற உனக்கு இது எப்படித் தெரியப்போறது? குறைந்தது அஞ்சு மாசமோ ஆறு மாசமோ அட்வான்ஸ் கொடுக்கணும். சில பேர் பத்து மாசம் கூட கேக்கறாங்க.''



''ஓகே. ஆயிரம் சதுர அடி முதல் மாடியில போர்ஷன் மாசம் ஆயிரத்து ஐநூறுக்கு நான் ஏற்பாடு பண்றேன். ரெடியா.?''

பாபு முதலில் சாந்தாவைப் பார்த்தான். பிறகு அப்பா பக்கம் கண்ணைச் செலுத்தினான்.

''மெட்ராஸ்ல இது ரொம்ப சீப் '' என்றாள் வைதேகி.

''எங்கே இருக்கு நீ சொல்ற வீடு?''

''இதே ராஜா அண்ணாமலைபுரம். இதே அஞ்சாவது மெயின்ல.''

''எனக்குத் தெரிஞ்சு ஒரு வீடும் காலியில்ல.''

''நம்பர் நூத்து ரெண்டு.''

''இது நூற்றுப் பத்து. எட்டு வீடு தள்ளியா?''என்று சுபா கேட்டாள்.

''அதில கீழ் போர்ஷன்ல டாக்டர் கைலாசம் இருக்கார்'' என்றாள் சாரதம்.

''மாட்டு வைத்தியர் வீடா?'' என்றாள் வைதேகி.

''மாடி காலியா? கைலாசம் அதை வாடகைக்கு விடறாரா?''

''கைலாசம் இல்லை. நான்!'' என்றாள் ரேவதி. பிறகு,

''அவரே வாடகைக்குத்தான் இருக்கார்''என்றாள்.

''அது கைலாசமே கட்டின வீடு இல்லையோ..?'' என்றார் சாம்பசிவம்.

''கட்டிட்டா விக்கக்கூடாதா? என் அப்பா அதை வாங்கினார்..''

யாரும் பதில் பேசவில்லை.

''மயிலாப்பூர் லஸ்ல பாங்க் ஆஃப் இண்டியா பிராஞ்சு இருக்கு. மாசா மாசம் வாடகையை பாபு நீ கரெக்டா என் அக்கௌண்ட்ல கட்டிடணும்..''

''அம்மா..!'' - பாபு.

''ஏற்கெனவே என்கிட்ட இதபத்தி பேசியாச்சுடா..''

''அப்பா நீங்க என்ன சொல்றீங்க..?''

''சொல்ல என்ன உரிமையும் அதிகாரமும் எனக்கு இருக்குடா பாபு.?''

''சாந்தா..''

''இவ கழுத்தைப் பிடிச்சுத் தள்றதுக்கு முன்னாடி போயிடுவோம். உங்களுக்கு இப்ப உங்க அம்மா அப்பா சப்போர்ட்டும் இல்லை.''



''பெரியம்மா புள்ளையாச்சேன்னு மூவாயிரம் கிடைக்கிற போர்ஷனை ஆயிரத்து ஐநூறுக்குத் தர்றேன். நீ இப்படிப் பேசினால் நிச்சயமா கழுத்தைப் பிடிச்சுத் தள்ளுவேன். இதுவும் கிடைக்காது. இதனால என்ன விபரீதம் விளையும்னு தெரியாது உனக்கு சாந்தா.! உன் மாமியார் மாமனாரும் வெளியேற வேண்டிய நிலை உண்டாகும்.''

''நீ பேசாம இருக்கக்கூடாதா சாந்தா.?''என்றான் பாபு.

''இன்னொரு விஷயம் சத்யா. பாபு மாசாமாசம் கட்டற பணத்தை நீ பாங்க்லேருந்து எடுத்து பெரியப்பா கைல கொடுக்கணும். இவ்வளவு கூட இத்தனை நாள் பாபு இந்த வீட்டுக்குப் போட்டதில்லை.''

''சரி, ரேவதி!''என்றான் சத்யா சிரித்துக்கொண்டே.

''சிரிக்காதே சத்யா. நெக்ஸ்ட் நீதான்.''

''என்ன நானா.?''

''அடையாறில ஒரு பெட்ரும் ஃப்ளாட் கட்டி முடிச்சாச்சு. வீரா வேலை செய்யற கம்பெனி கட்டியது. ஃபர்ஸ்ட் ஃப்ளோர். வைதேகிக்கு கல்யாணம் ஆன கையோட சுபாவுக்கும், உனக்கும் கல்யாணம் ஆகிவிடும். அது வரையில் நீ அங்கே இருந்து கொள்.''

''வாடகை..?!''

''நீயே தீர்மானம் பண்ணி நியாயமாக் கொடு.''

''என்னிக்குப் புறப்படணும் ரேவதி.?''

''ரெண்டு வாரத்தில..''

''தாங்க்ஸ்..''

''ஆமாம். அக்காவுக்கு கல்யாணம்னு சொன்னாயே ரேவதி. வீடு தயாரா இருக்கிற மாதிரி மாப்பிள்ளையும் பார்த்தாச்சா.?''என்று சுபா கேட்டாள்.

''சத்யா, இதுக்கு நீ பதில் சொல்லு..''

''ரேவதியோட அப்பா முன்னால பார்த்து வச்ச பிள்ளை. பெயர் சார்நாத். அமெரிக்கா. பெரிய வேலை. சொந்த வீடு. அமெரிக்கன் சிடிஸன். அவனோட போட்டோவை வைதேகி பார்த்திருக்கிறாள். வைதேகியின் போட்டோவை அவன் பார்த்திருக்கான். ரெண்டு பேருக்குமே பிடிச்சுப் போயாச்சு.''

''வைதேகி, இது நிஜமா?'' என்றாள் சாரதம்.

''ஆமாம்மா..''

''என் பெத்த தாயார்கிட்டேகூட நீ சொல்லலே?''

''ரகசியமா இருக்கட்டும்னு சத்யா சொன்னான். 'ரேவதி ஒரு நாள் வருவா. அதுக்கு அப்புறம் தெரிஞ்சாப் போதும்னு'ம் சொன்னான் அம்மா..''



''அப்ப அக்கா அமெரிக்கா போயிடுவா. டீ.. நீ அங்கேயே ஜார்ஜட் வாங்கிக்கோ. இப்ப ரேவதி கொண்டு வந்ததையெல்லாம் நானே எடுத்துக்கிறேன்''என்றாள் சுபா.

''நீ என்ன சொல்ற சார்நாத்..?''

''அசல் தஞ்சாவூர். அண்ணாநகர்ல அம்மாவும் தங்கையும் இருக்காங்க. சார்நாத் கூடிய சீக்கிரம் வருவான் ''என்றாள் ரேவதி.

''இதுக்குத்தான் அரை கிலோ தங்கமா?''

''சுபாவுக்கு நூத்தம்பது. வைதேகிக்கு நூறு. பெரியம்மாவுக்கு பாக்கி. அவ இஷ்டப்பட்டதை சாந்தாவுக்கும் கொடுக்கலாம்.''

''வீடாச்சு. மாப்பிள்ளையாச்சு. அப்புறம் என்ன ரேவதி?'' என்று வீரா கேட்டான்.

''அதை நான் இஷ்டப்பட்டப்பச் சொல்லுவேன்!'' என்றாள் ரேவதி.



## 6

கடந்த ஒரு வாரமாக ரேவதியுடன் சாரதமோ சாம்பசிவமோ முன்போல அதிகம் பேசமுடியவில்லை. அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து அவசரப்படாமல் குளித்துவிட்டு வாசலில் காத்திருக்கும் டூரிஸ்ட் காரில் ரேவதி ஏறினாள். கூட வீரா. இப்படி ஏழு நாட்கள் சென்றன. சாரதத்துக்கு இப்போது அவளிடம் வெறுப்பு இல்லை. மாறாக அபிமானமும், ஒருவித பயமும் ஏற்பட்டிருந்தது. தான் வந்த அன்று இரவு சொன்னபடி திட்டத்தின் முதற்படியை அவள் தாண்டிவிட்டாள். பாபுவும், சாந்தாவும் நேற்று வெள்ளிக்கிழமை டாக்டர் கைலாசம் குடியிருக்கும் வீட்டின் மாடிப் போர்ஷனுக்குச் சென்று பால் காய்ச்சிக் குடித்து ஏப்பத்தையும் விட்டுவிட்டு மாலையே குடி பெயர்ந்தார்கள். பிள்ளை தனியாகச் சென்றுவிட்டானே என்ற வருத்தம் பொதுவாக மனத்தில் தட்டினாலும் ஒரு விதத்தில் திருப்தியும் சமாதானமும் உண்டாயின. குடும்பச் சுமையை தாங்களே முழுதும் ஏற்கும் போதுதான் அவனுக்கும் சாந்தாவுக்கும் பொறுப்புணர்ச்சி வரும் என்றும், சாந்தாவும் இனிமேல்

(52'ம் பக்கம் பார்க்க)

(35'ம் பக்கத் தொடர்ச்சி)

வாயாடமாட்டாள் என்றும் எண்ணங்கள் தோன்றின.

சத்யா வழக்கம் போல் காலையில் தனியாகச் சென்று மாலையில் சுபாவை ஸ்கூட்டரில் ஏற்றி அழைத்துக்கொண்டு வந்தான். அவனும் இன்னும் ஓரிரு நாட்களில் போய்விடுவான். ஒரு நாள் மருமகனாகவும் வருவான்.

வைதேகிக்கு சார்நாத் என்று ரேவதி முடிவு செய்திருந்தாள். வைதேகி இது வரையில் எந்தவிதமான ஆட்சேபணையும் எழுப்பவில்லை. இருபத்தொன்பது வயதுக் கிழவியாகிவிட்ட அவள் முப்பது முடிவதற்குள்ளாவது ஒரு துணைவனுடன் வாழ்க்கையில் பிரவேசிக்கமாட்டோமா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறாள். எப்போது சார்நாத்தின் தாயாரும் தங்கையும் அவளைப் பெண் பார்க்க வருவார்கள்? இது பற்றி இன்னும் ரேவதி தீர்மானமாக எதையும் சொல்லவில்லையே? வைதேகிக்குத் திருமணம் நிச்சயமானால் ஏன் அதே நாளில் அதே மண்டபத்தில் சுபாவின் கல்யாணத்தையும் நடத்திவிடக்கூடாது.?

அன்று சாம்பசிவத்திற்கு வேலை இல்லை. அவர் வீட்டிலேயே இருந்தார்.

''எனக்குப் பேசணும்..''என்று கூறிக்கொண்டே சாரதம் அவர் எதிரே வந்தாள்.

''எதைப் பத்தி..?''

''ரேவதி!''

''என்ன.?''

''அவ உங்க தம்பி பெண்.''

''ஆமாம்.''

''வீரா நம்ம பிள்ளை.''

''ஆமாம்..''

''வீரா லீவ் எடுத்திருக்கான்.''

''அதற்கென்ன சாரதம்..?''

''லீவ் எடுத்ததற்கு ஒன்றுமில்லை. ஆனா ஏன் தினசரி இவளோட காலங்கார்த்தாலே டூரிஸ்ட் வண்டியில் போகணும்.? ராத்திரி நேரம் கழித்து வரணும்..?''

''இது பத்தி நான் அவன்கிட்ட கேட்டேன்.''

''என்ன சொல்றான்?''

''ஒரு நாள் மகாபலிபுரம், இன்னொரு நாள் திருப்பதி...''

''அப்படியா.?''

''ஒரு நாள் காஞ்சிபுரம்.''

''தேவலையே..''

''இன்னொரு நா வேடிவக்கர்..''

''ரேவதிக்கு பக்தியும் உண்டா..?''



''அமெரிக்கால பிறந்து வளர்ந்துட்டா பக்தி இருக்கப்படாதா?''

''ஆனா ஏன் வீரா கூடப் போகணும்.?''

''என்னால என் வயசில அவளை அழைச்சிட்டுப் போக முடியுமா.?''

''சத்யாவுக்கு என்னாச்சு.? அவன்தானே மத்த எல்லா விஷயங்களில் பொறுப்பா இருக்கான்.?''

''நீ விஷயம் புரியாமப் பேசதே!''

''என்ன விஷயம்?''

''சத்யாவுக்கும் சுபாவுக்கும் கல்யாணம் நடக்க இருக்கு.''

''அதனாலே..''

''ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்பி....''

''ஓ.. இப்பப்புரியறது.. எங்கே அவகூடப் பழகிப்பழகி பெரிய பணக்காரியான ரேவதியை கொக்கி போட்டு இழுத்துடுவானோன்னு சுபாவுக்குத் தோணலாம் இல்லியா.? அதானே.?''

''கரெக்ட்.''

''இப்படிப்பட்ட பயம் யார் மனசிலேயும் உண்டாகப் படாதுன்னுதான் ஒன்னுவிட்ட அண்ணனை ஒரு டூரிஸ்ட் கிகடா ரேவதி அழைச்சுட்டுப் போறா..''

''இப்பத்தான் மனசுக்கு சமாதானமாச்சு.''என்றாள் சாரதம்.

அன்று இரவு பத்தேமுக்காலுக்கு டெலிபோன் மணி அடித்தது.

இந்த வேலையில் யார் போன் செய்கிறார்கள்.?

சாரதம் அலுப்புடன் எழுந்தாள்.

''பெரியம்மா.. அது எனக்காகத்தான் இருக்கும்.''

சொன்ன ரேவதி பாய்ந்து ஓடி ரிசீவரை எடுத்தாள்.

''ரேவதி ஹியர்... ஹாய் தாரிணி எப்படி இருக்கே.. எப்ப இண்டியா வர்றே.? அப்படியா.. வர்ற மாசம் ஆறாம் தேதியா.? நான் ஏர்போர்ட்ல மீட் பண்ணி ஒட்டலுக்கு அழைச்சிட்டுப் போறேன். என்ன ஏழெட்டு நாள்தான் இருப்பியா...ஓகே..ஓகே.. நான் அதுக்குள்ளே என் வேலையை முடிச்சிட்டு உன்னோட திரும்பறேன். என் டூர் டிக்கட் ஒப்பனாத்தான் இருக்கு. என் வேலை இங்கே சீக்கிரம் முடிஞ்சிடும். ஓகே.. விஷ்..பை.பை..''

ரிசீவரை வைத்துவிட்டு ரேவதி சிரித்தாள்.

''அமெரிக்காவிலேருந்து'' என்றாள்.



''ஹெநேகிதியா.?''

''என்னோட டியரஸ்ட் ஃப்ரண்டு. அப்பா போனப்புறம் ரெண்டு மாச காலத்துக்கு நான் தாரிணி வீட்லதான் இருந்தேன். அவளும் என்னை மாதிரி எம்.பி.ஏ ஹார்வர்ட்ல. இப்ப அவளும் நானும் ஒரே கம்பெனிலதான் வேலை பார்க்கறோம்.''

''அவ எதுக்கு வர்றா?''

''பதினஞ்சு நா லீவு. லண்டன், பாரீஸ், ரோம்னு சுத்திப் பார்த்துட்டு இந்தியா வர்றா. அதுவும் எனக்காக. சின்ன வயசில மெட்ராஸ் வந்திருக்கா. ஆனா, ஒண்ணும் நினைவில இல்லை. இந்தியால அஞ்சாறு நாள் இருப்பா. அதுக்குள்ளே டாஜ்மகால் பார்த்தாகணும், கோவா பார்த்தாகணும், ஹரித்வார் போயாகணும்.'' ரேவதி அடுக்கிக் கொண்டே போனாள்.

பிறகு திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தது போல ''நானும் வீராவும் இன்னிக்கு சாயங்காலம் சுருட்டப்பள்ளியி லிருந்து திரும்பறப்ப அண்ணாநகர் போயிருந்தோம்.''

''சுருட்டப்பள்ளியா..? அது எங்கே இருக்கு.?''

''என்ன பெரியம்மா நீங்க.? மெட்ராஸ்ல இத்தனை வருஷமா இருக்கீங்க. சுருட்டப்பள்ளி எங்கேனு தெரியாதா.? திருவள்ளூருக்குப் பக்கத்திலே. அங்கிருந்து ஊத்துக்கோட்டை போற வழியில. தட்சணாமூர்த்தி பார்வதியின் துடையில தலை வச்சு படுக்கிற மாதிரிக் காட்சி. கர்ப்பக்கிரஹத்தைப் பாக்கிறப்போ பரவசப்பட்டுப் போனேன். நான் எங்கேயோ போறேனே..ஹாங் பரவசப்பட்டுப் போனேன். சார்நாத் மெட்ராஸ் வந்தாச்சு. நாங்க போனப்ப அவர் இல்லே. அம்மாவும் தங்கையும்தான் இருந்தா. நாளைக்கு போன் வரும்.''

வீராவும் பேச்சில் கலந்துகொண்டான்.

''ப்ரொபசர் சார்நாத் அடுத்த வாரம்தான் வர்றதா இருந்தது அம்மா. இவ அவசரப்படுத்திவிட்டிருக்கா போலிருக்கு. அவர் நேத்தே வந்தாச்சு.''என்றான்.

''எப்ப திரும்பப் போவானாம்.? கேட்டியா?''

''கேட்கறதுக்கு முன்னால அவரோட அம்மாவே சொல்லிட்டா. மெட்ராஸ்ல பதினஞ்சே நாள்தானாம். போறப்ப மனைவியையும் அழைச்சிட்டுப் போறதா பிளானாம். ரெண்டு மூணு இடங்கள்லேர்ந்து அண்ணாநகர் வீட்டைத் தாக்கிட்டிருக்கா.!'' என்றான் வீரா.

''அப்ப நம்ம வைதேகி..?''

''ரேவதி நம்பிக்கையோட இருக்கா..''

''தெய்வம்தான் வழி காட்டணும்.'' என்றாள் சாரதம்.



''அந்தத் தெய்வத்தைச் சுண்டி இழுக்கத்தான் ரேவதி கோவில் கோவிலா முற்றுகை இட்டுட்டு வர்றாளே..!''என்று சிரித்தான் வீரா.

''நீயும்தான் கூட வந்தே..?''என்று ரேவதி கூறினாள்.

''நான் ஒரு கைட். அவ்வளவுதான்..''

மாடியில் லேசான குறட்டையுடன் தூங்கிக் கொண்டிருந்த வைதேகியின் காதில் இதை பேசிக் கொண்டிருப்பதெல்லாம் எப்படிக் கேட்க முடியும்..?

மறு நாள் காலை எட்டரை மணிக்கு போன் வந்தது. அன்று மாலை ஐந்து மணிக்கு வைதேகியைப் பெண் பார்க்க வருவதாகச் செய்தி வந்தது.

மாலை ஐந்து மணி.

சார்நாத்தும், அவனுடைய தாயார் மற்றும் தங்கையும் காரில் வந்து இறங்கினார்கள்.

''என் பெயர் சார்நாத். இவ என் தங்கை பானுமதி. அவ ஹஸ்பண்ட் பிஸினஸ் பண்றார். இவ என் அம்மா அலமேலு. ரேவதி உங்க பொண்ணைப்பத்தி ரொம்ப பாராட்டிப் பேசினா. ரேவதி யாரைப் பற்றியும் வாயாரப் புகழ்ந்து பேசிக் கேட்டது கிடையாது. அப்படிப்பட்டவ சொல்றதுன்னா நிச்சயமா..''

''நாதா..மொதல்ல பொண்ணைப் பாருடா,'' என்ற அலமேலு, ''ரேவதி தன்னோட கண்ணோட்டத்திலேருந்து சொல்லியிருப்பா. உனக்கு வைதேகியைப் பிடிக்கணும். அதுதான் முக்கியம்.''என்று கூறினாள்.

''நன்னாச் சொன்னீங்க அலமேலு மாமி.!''என்ற சாரதம் ''நான் மாமின்னு கூப்பிட்டது தப்பு இல்லையே..?''

''ஒரு தப்பும் இல்லை..''

ஹால் நிரம்பி வழிந்தது.

பாபு, சாந்தா கூட வந்திருந்தார்கள்.

வீராவும், சத்யாவும் ஓர் ஓரமாக நின்றிருந்தார்கள்.

இரட்டை சோபாவில் அலமேலுவும் பானுமதியும் அமர்ந்திருக்க சார்நாத் சிறிய சோபாவில் உட்கார்ந்திருந்தான்.

பெரியப்பா உட்கார்ந்திருந்த சோபாவைப் பிடித்தவளாய் ரேவதி பின்னால் நின்றாள். அருகே நின்று கொண்டிருந்த சாரதம் ''வைதேகி, எல்லார்க்கும் டிபன் கொண்டு வா. அவங்க சாப்பிட்டுக்கிட்டிருக்கிறப்ப காப்பி கலந்தாப் போதும்.''என்றாள்.

''சரிம்மா..''

வைதேகி நகர கூடவே தங்கை சுபாவும் போனாள்.

''ஒன் மினிட் ப்ளீஸ்..''

வைதேகி திரும்பினாள்.

சார்நாத் புன்முறுவல் பூத்தான்.

''டிபன் கடையில..நான் ஒன்னு, ரெண்டு கேள்விகள் கேட்கலாமா.?''

வைதேகி அம்மாவைப் பார்த்தாள். சாரதம் கண்ணால் சமிக்ஞை செய்ய, 'ஷ்யூர்'என்றாள்.

''நீ இங்கே ஒரு ஆபீஸ்ல வேலையா இருக்கே இல்லே..?''

''ஆமாம்..''

''எத்தனை வருஷமா.?''என்று சார்நாத் கேட்டான்.

''ஏழு.''

''இப்ப நீ உன் வேலையை ராஜிநாமா செய்யவேண்டுமே.?''

''அதாவது நம்ப கல்யாணம் நிச்சயமானா.''

''ஆறதுன்னே வச்சுப்போம்..''

''அமெரிக்கால என் படிப்புக்கு ஏத்தபடி வேலை கிடைக்காதா.?''

''ஷ்யூர். ஆனா நீ வேலைக்கு போறதை நான் விரும்பமாட்டேன்.''

''அப்படியா!''

''எனக்கு ஒரு வீடு சொந்தத்துலே இருக்கு. கார் இருக்கு. மாசம் ரெண்டாயிரத்து ஐநூறு டாலர்....''

''இதெல்லாம் ஏன் சொல்லணும் நீங்க..?''

''அங்க போய் சிணுங்கக்கூடாது இல்லையா..?''

''வேறு ஏதானும் கேட்க இருக்கா.?''

''இல்லை. இப்ப எல்லாரும் டிபன் சாப்பிடுவோம்..''

''எல்லாம் ரெடி.''என்றாள் சாரதம். அவளுக்கு அமெரிக்க மாப்பிள்ளையா.? எல்லாம் ரேவதி வந்த வேளை.

''ஆனா ஒரு கண்டிஷன்.''என்றான் சார்நாத்.

எல்லோரும் திகைத்துப் போனார்கள். நிபந்தனையா?

''இன்னும் ஒன்னு ரெண்டு நாள்ல ரிஜிஸ்டர் மேரேஜ்.''

''ரிஜிஸ்டர் கல்யாணமா? எங்க பரம்பரையில இதுவரை நடக்காதது அது.. தாலி..''

சாரதத்தை முடிக்கவிடவில்லை சார்நாத்.

''கொஞ்சம் என்னை பேசவிடுங்க. ஒரு மாசம் முன்னாடியே சத்யா நானும் வைதேகியும் சேர்ந்து



எழுதிக்கொடுத்த லெட்டரை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் போய்ப் பதிவு செஞ்சாச்சு. அங்க கல்யாணமாகி மாரேஜ் சர்ட்டிபிகேட் இருந்தாத்தான் அவ அமெரிக்கா போக விஸா கிடைக்கும். அதுக்கு அப்புறம் வைதீக முறையில் உங்க பாரம்பரியம் கெடாதபடி அவ கழுத்தில தாலியைக் கட்டறேன்.''

''என் தங்கைகிட்ட பாஸ்போர்ட் கூட கிடையாது''என்றான் பாபு.

''உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். அக்கா உன் பாஸ்போர்ட்டை எடுத்துட்டு வரட்டுமா?'' என்றாள் சுபா.

''எங்களுக்குத் தெரியாம என்னவெல்லாமோ நடந்திருக்கு''என்றாள் சாரதம்.

''எல்லாத்துக்கும் நான்தான் காரணம். பெரியம்மா.. சத்யா உடந்தை.''என்று சொல்லிச் சிரித்தாள் ரேவதி.

ஒருவாறாக டிபன் காப்பி முடிந்தது. பிள்ளை வீட்டாரும் அண்ணா நகர் திரும்பினார்கள்.

அவர்கள் சென்றபிறகு சாரதம் ''எனக்கு ஒரு எண்ணம்..''என்றாள் சாம்பசிவத்தைப் பார்த்து

''என்ன.?''

''சுபா கல்யாணத்தையும் அதே பந்தல்ல அதே நாள்ல நடத்திடலாமே..''

''நோ !''என்றான் சத்யா.

''ஏண்டா..?''

''எனக்கு எத்தனை சிநேகிதர்கள் மெட்ராஸ், பாம்பே, டெல்லி இங்கல்லாம் இருக்கா தெரியுமா.?''என்றான் சத்யா.

''இது என்ன ஆல் இண்டியா டோர்னமெண்டா. ஆப்டர் ஆல் ஒரு கல்யாணம். அம்மா உன் இஷ்டப்படி செய் அம்மா. அனாவசியமா ரெண்டு செலவு எதுக்கு.?''என்றாள்.

''நான் ரெடி இல்லை.''என்றான் சத்யா.

''அப்ப இப்படிச் செய்யலாம் அம்மா.''

''எப்படிம்மா சுபா.?''

''சத்யாவுக்கு நான் எப்படி முறைப்பொண்ணோ, அப்படியேதான் சிவக்குமாருக்கும். உன் அண்ணாவை உடனே நேரில் பார்த்து அவர் புள்ளையை நான் கல்யாணம் பண்ணிக்க சம்மதம்னு சொல்லு..''என்றாள் சுபா.

''என்ன சுபா இப்படி சொன்னால்[illegible] பேசறே.? சத்யாதான் உன் புருஷன்னு நாம ஏற்கெனவே முடிவு செய்தாச்சே..?''என்றார் சாம்பசிவம்.

''முடிவை மாத்தறதிலே என்ன தப்பு.? எந்த[illegible] மாமா பொண்ணுக்கும் ஒரு நல்ல துணை அவசியமானது. [illegible]



பிள்ளை சிவக்குமார் ஒரு சார்டர்டு அக்கௌண்டண்ட். மாமாவே ஒரு தடவை அம்மாகிட்டே வாய்விட்டுக் கேட்டிருக்கார். சிவக்குமாருக்கு என்ன குறைச்சல்.? சொல்லப்போனா சத்யாவைவிட அதிகமாவே சம்பாதிக்கிறார். ரேவதி சொல்ற ஃப்ளாட்ல நாங்க எங்க வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம். 'அது முடியாது. சத்யாவுக்குத்தான் அந்த வீடுன்னு' ரேவதி சொன்னாலும் எனக்கு ஓகேதான்..''

''ஏய் என்ன பொரிஞ்சு தள்றே.?''என்றான் சத்யா.

''ஏய் கிய்னெல்லாம் சிவக்குமார் என்னைக் கூப்பிடமாட்டான். அவனுக்கு மரியாதையும் பண்பும் உண்டு.''

''பிரிதிவிராஜன் சம்யுக்தையை தூக்கிட்டுப்போன மாதிரி உன்னைக் கல்யாண மண்டபத்லேர்ந்து தூக்கிட்டுப் போயிடுவேன்.''

''உனக்கு சைக்கிளே சரியா விடத் தெரியாது. குதிரையிலா ஏறி வரப்போறே.?''

''உன்னைத் தூக்கிட்டுப்போக எதுக்கு ஒரு குதிரை.? ஒரு கழுதையே போதும்.''

''ஓ.. அப்ப நீ நடத்தே வரப்போறியா? இது தெரியாம போச்சே.?''

''மொதல்ல ரெண்டு பேரும் வார்த்தையாடலை நிறுத்துங்கோ''என்ற சாரதம், ''நீங்க போய் மொதல்ல சாஸ்திரிகளைப் பாருங்க.''என்றாள்.

''மாமி. நீங்க மொதல்ல உங்க அண்ணாவைப் பார்த்துட்டு வாங்கோ. கூடவே ஒரு டெய்லரையும் அழைச்சிட்டுப் போங்க. சிவக்குமாருக்கு பாண்ட் கோட் தைக்க அளவு எடுக்க சௌகரியமாக இருக்கும்''என்றான் சத்யா.

''நல்ல ஐடியாம்மா. நான் இப்பவே போய் உசத்தி பாண்ட், கோட், ஷர்ட் துணியெல்லாம் வாங்கிட்டு வரேன்''என்றாள் சுபா.

''பேசாம இருங்க. என்ன நீங்க இன்னும் சாஸ்திரிகளைப் பார்க்க புறப்படலியா.?''என்றாள் சாரதம்.

''இப்படிப்பட்ட தமாஷ் அமெரிக்கால எனக்குக் கிடைக்கவே கிடைக்காது''என்றாள் ரேவதி.

''அதுக்காகக் குறைபட்டுக்காதே ரேவதி. நீ சத்யாவை அழைச்சுக்கிட்டுப் போ. உன் வீட்டு விதூஷகனா அவன் இருப்பான். ரெண்டு வேளை சாப்பாடு போட்டு மாசாமாசம் கைச்செலவுக்கு அஞ்சாறு டாலர் கொடுத்தால் போதும்.''



''எனக்கும் ஆசைதான் சுபா.. ஆனா அவன் என்னுடைய ஏஜண்ட்டாச்சே.. அவனும் வந்துட்டா என் சொத்துக்களைப் பராமரிக்க யார் இருக்கா?''

''ரேவதி'' என்று கத்தினான் சத்யா.

''என்ன சத்யா என்மேல எரிஞ்சுவிழற மாதிரிக் கத்தறே?''

''அடையாறு வீட்டுச் சாவி எங்கிட்டதான் இருக்கு! நான் இப்பவே அங்கே போறேன்.''

''குட்பை அண்ட் குட் லக்.. மறந்துடாம பொடி நடையா வந்து சிவகுமார் தாலி கட்டறதுக்கு முன்னால என்னைத் தூக்கிட்டு போயிடு! டாடா.. பாய் பாய்..''

அவள் சொல்லி வாய்மூடவும் ஒரு தம்பதியர் வீட்டினுள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

''வாங்க மாமா.. வாங்கோ மாமி!'' என்ற சுபா, ''அம்மா மாமா மாமி வந்திருக்கா.. உட்காருங்கோ.''என்று சொல்லிவிட்டு ரேவதியைப் பார்த்தாள்.

''வா.. அண்ணா, வா மன்னி!'' என்று வரவேற்றுக் கொண்டே சாரதம் சாம்பசிவம் பின் தொடர வந்தாள்.

''வர்ற ஞாயிற்றுக்கிழமை சிவாவுக்கு நிச்சயதார்த்தம். நீங்க எல்லோரும் வந்துடணும்.'' என்றார் நீலகண்டன்.

''ரொம்ப சந்தோஷம் நீலகண்டா. பொண்ணு எந்த ஊரு?''

''பூர்வீகம் திருக்கருகாவூர்.. ஆனா சம்பந்தி இந்த ஊர்ல செட்டிலாகி நாற்பது வருஷமாறது!''

''பொண்ணு எப்படி, என்ன படிச்சிருக்கா?'' என்று சாரதம் கேட்டாள்

''அவ பேரும் உன் ரெண்டாவது பெண்ணோட பேருதான். சுபா சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட்டா இருக்கா..''

''நல்ல பொருத்தம்!'' என்றாள் வைதேகி

''நீலகண்டனும் அவருடைய மனைவி பாக்கியமும் ரேவதியைப் பல தடவைகள் பார்த்தாகிவிட்டது.

பாக்கியம் கேட்டாள், ''உங்காத்துக்கு யாரோ வந்திருக்காங்க. பார்த்தமுகமாத் தெரியலியே!'' என்று.

''என் தம்பி பொண்ணு ஸ்டேட்ஸில இருக்கா.''

''அப்படியா.. ரொம்ப சந்தோஷம். நீயும் இந்தக் குடும்பத்தில ஒருத்தி. ஞாயிற்றுக்கிழமை நீயும் இவாகூட வரணும், என்ன?'', என்றாள் பாக்கியம்.

''வராம இருப்பேனா?''

அவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு சாம்பசிவம்

சாஸ்திரிகள் வீட்டுக்குப் புறப்பட்டார் சாரதம் கோவிலுக்குச் சென்றாள். பாபு - சாந்தா தங்கள் வீட்டுக்குப் போனார்கள். திடீரென்று வந்த வீரா ரேவதியை அழைத்துக்கொண்டு வெளியேறினான். வைதேகி தன் சிநேகிதி வீடுவரைப் போய்விட்டு வருவதாகக் கூறிச் சென்றாள்.

ஹாலில் சத்யாவும் சுபாவும் மட்டுமே இருந்தார்கள்.

சத்யா ஏதோ பேச ஆரம்பிப்பதற்குள் சுபா அழ ஆரம்பித்தாள்.

''ஏய் எதுக்கு அழறே?''

சுபா பதில் கூறாமல் அழுகையைத் தொடர்ந்தாள்.

''காரணம் சொல்லிவிட்டு அழு.''

''இந்த சிவாவும் கைநழுவிப் போய்விட்டானேனு அழறேன்.''

''சரி நீ அழுதுட்டிரு. நான் கிளம்பறேன்.''

''எங்கே அடையாறு வீட்டுக்கா?''

''இல்லே?''

''பின்னே''

''வாணி வீட்டுக்கு.''

''உன் ஆபீஸ்ல வேலைப் பாக்கிற வாணியா?''

''அவளேதான்.''

''எதுக்கு?''

''வாணி என்னை லவ் பண்றா. அவ அம்மா அப்பாகிட்டப் பேசி ஒரு நல்ல நாளைப் பார்க்கச் சொல்லணும்.''

''ஆல் தி பெஸ்ட்.''

சத்யா மெல்ல நகர்ந்தான். அவன் வாசலை அடைகையில் 'ஏய்' என்ற அழைப்பு கேட்டது. திரும்பினான்.

''என்ன?''

''ஒரு சமாச்சாரம்.''

''என்ன?''

''டேபிள் மேல நிறைய குப்ப காகிதங்கள் இருக்கு. நடுவில ஒரு மாரேஜ் இன்விடேஷன் இருக்கு. உன் பெயருக்குத்தான். அதைப் பார்த்துவிட்டு வாணி வீட்டுக்குப் போ.''

''நான்தான் அதைப் பிரிண்ட் பண்ணக் கொடுத்ததே! ஞாயிற்றுக்கிழமை வாணி கல்யாணத்துக்கு நான் போயாகணும்!'' என்றான் சத்யா.

''நான் உன்னை மடக்கப் பார்த்தேன். நீ என்னை மடக்கப் பார்த்தே!''



''ஆனா ரெண்டு பேருக்கும் ஏற்கெனவே இந்த ரெண்டு பேர்களுடைய கலியாண விஷயம் தெரியும்!'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் சத்யா.

''சத்யா!''

''என்ன சுபா?''

''ஒரு சின்ன ரிக்வெஸ்ட்!''

''என்ன சுபா?''

''இப்ப நீ சிரிச்சியே?''

''ஆமாம் அதுக்கு என்ன?''

''இனிமே அது மாதிரி சிரிக்காதே!''

''ஏன்?''

''முகமெல்லாம்..''

''முகமெல்லாம்..?''

''அசடு வழியறது!''



# 7

'ஏழாம் தேதி கலியாணம்' என்று நிச்சயிக்கப்பட்டது. ரேவதி அணிந்திருந்த தங்கமும் வைரமும் நகைகளாக உருமாறி வைதேகி மற்றும் சுபாவை அலங்கரித்தன.

ஆறாம் தேதி அதிகாலையில் ஒரு டூரிஸ்ட் கார் வந்து நிற்க, ரேவதியும் வீராவும் ஏறிக் கொண்டார்கள்.

''பெரியம்மா இன்னிக்குத்தான் என் சிநேகிதி தாரிணி வந்தா. அவளுக்கு அடையாறு பார்க் ஷெரட்டன்ல இடம் போட்டிருக்கு. நேரே ஏர்போர்ட்லேந்து அங்கே போயிடுவோம். நேரமாகும்.''

''சாப்பாட்டுக்கு வந்துடுவீங்க இல்லியா?''

''நான் தாரிணியோட சாப்பிடப் போறேன்!''

''வீரா, நீ?'' என்று சாரதம் கேட்டாள்.

''ரேவதி என்ன சொல்றாளோ அதபடி செய்யறேன் அம்மா!''

திடீரென்று சாரதத்துக்கு கோபம் வந்தது.

''ஏன்டா வீரா நாளைக்கு உன் அக்காவுக்கும் தங்கைக்கும் கலியாணம். தெரியுமோ இல்லியோ?''

நாளைக்குத்தானே அம்மா!''



''இன்னிக்கு பன்னண்டு மணிக்கு எல்லாரும் வீட்டைக் காலி பண்ணிட்டு மண்டபத்துக்குப் போயிடுவோம். ராத்திரி ஏழுமணிக்கு நிச்சயதார்த்தம். இதெல்லாம் உனக்குத் தெரியுமோ, தெரியாதா?''

''தெரியுதம்மா..'' என்றான்.

''தெரிஞ்சும் எதிலும் பட்டுக்காம, ரேவதி கூடவே போனா எப்படி? பாபு, சத்யா ரெண்டு பேரும் உழைக்கிற மாதிரி நீயும் அக்கறை காட்ட வேண்டாமா?''

''ஓகே அம்மா... நான் ஏர் போர்ட்லேந்து நேரா இங்க வந்துடறேன். சாப்பிட வரேன்.''

''இந்தாம்மா ரேவதி.. உன்னாலதான், நீ வந்த வேளைதான் என் ரெண்டு பொண்ணுக்கும் கலியாணமே நடக்கிறது. நீயும் வந்துரும்மா.. உன் சிநேகிதியையும் அழைச்சுட்டு வா...''

''ட்ரை பண்றேன்.''

''அப்படிச் சொல்லாதே ரேவதி... நாங்க கூப்பிட்டாத்தான் அவ வருவான்னா, உன் பெரியப்பாவை அனுப்பறேன்.''

''அப்பா வருவா.. நிச்சயம் வருவா.''

நிச்சயதார்த்தம்.

மண்டபத்தில் உறவினர்களும் குடும்ப நண்பர்களும் நிறைந்திருந்தார்கள். ரேவதி கிளிப்பச்சை நிறத்தில் புடவை கட்டிக்கொண்டு, வருகிறவர்களையெல்லாம் புன்முறுவல் பூக்க வரவேற்றாள். இந்தக் காட்சியைக் காண சாப்பசிவத்துக்குப் பெருமிதமாக இருந்தது. சாரதமும் பூரித்துப் போனாள்.

''திடீரென்று ஒரு படகுக் கார் வந்து நிற்க அதிலிருந்து சல்வார் கமீஸ் அணிந்து, கண்களை மறைக்கும் கறுப்புக் கண்ணாடி தரித்து ஒரு பெண் இறங்கி, எல்லோரையும் அலட்சியமாகப் பார்த்துக்கொண்டே பிரவேசித்தாள். ரேவதி அவளை நோக்கி ஓடினாள்.

''ஹாய் தாரிணி!''

''நீ சொன்னாயே, உன் பெரியப்பா நேரிலே வந்து அழைச்சாரேன்னு வந்தேன்.''

இதற்குள் சாம்பசிவம் வந்தார்.

''நீ வந்ததில் ரொம்ப சந்தோஷம் தாரிணி. நாளைக்கு முகூர்த்தம். அதற்கும் நீ அவசியம் வரணும்.''

''ஐ வில் ஸீ!'' என்ற அவள் கண்ணாடியைக் கழற்றினாள். இப்போது அவளுடைய உண்மையான அழகு மண்டபம் பூராவும் பிரகாசித்தது.

இரு கல்யாணங்களும் அமோகமாக நடந்து முடிந்தன.



அதற்கு அடுத்த நாள் காலை மண்டபத்தில் அனைவரும் கூடி இருந்தார்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் சாப்பாடு முடிந்துவிடும். அதன் பின்னர் மண்டபத்தையும் காலி பண்ணலாம்.

திடீரென்று வீரா எழுந்தான்.

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்!''

சுபா சிரித்தாள். ''என்ன அண்ணா, சென்ட்ரல் ஸ்டேஷன் அன்னௌன்சராயிட்டாயா?''

''ப்ளீஸ் லெண்ட் யுவர் இயர்ஸ்!''

''வீரா ஷேக்ஸ்ப்பியராகிட்டான்!'' என்றாள் வைதேகி.

''ஜூலியர் சீசர்ல இதை அன்டோனி சொல்றானா, ப்ருட்டஸ் சொல்றானா?'' என்று சார்நாத் கேட்டார்.

''வீரா என்ன சொல்லணுமோ அதைச் சட்புட்டுன்னு சொல்லு.'' என்றான் சத்யா.

''நம்ப வைதேகி, சுபா ரெண்டு பேருடைய கலியாணத்துக்கும் ஆதார சக்தியா இருந்தவ ரேவதி. அதுக்கு மொதல்ல நாம நம்ப நன்றியைத் தெரிவிச்சாகணும்.''

''தாங்க் யூ ரேவதி.''

''ரொம்ப நன்றியம்மா ரேவதி.''

''ரேவதிப் பொண்ணு, உனக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேம்மா.''

''எங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைச்சதுக்கு ரொம்ப தாங்க்ஸ், ரேவதி.''

''அமெரிக்காவில ஒரு வாழ்க்கை அமைச்சுக் கொடுக்க நீ பாடுபட்டதுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலே, ரேவதி.''

வீரா விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

''இப்போ எல்லோரும் சொல்லியாச்சு. நானும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் திருமணமும் அவள் மூலமாகத்தான் நடக்கப்போறது.''

''என்னடா சொல்றே வீரா!''

''யார்டா அந்தப் பொண்?''

''லவ்வா?''

''பொண்ணு யாருப்பா, வீரா?''

''அப்பா! அம்மா! பொண்ணின் பெயர் ரேவதி பஞ்சநதம்?''

சாரதம் சீறி எழுந்தாள்.

''என்னடா சொன்னே?''

''வருங்கால மனைவியின் பெயரைச் சொன்னேன்.

அம்மா!''

''அடப்பாவி! அவ உன் தங்கைடா.''

''கஸின் ஸிஸ்டரை கஸின் பிரதர் கலியாணம் செய்து கொள்றது நம்ப நாட்ல வழக்கம் இல்லே...'' – வைதேகி.

''இங்கிலண்டல உண்டு.'' – சார்நாத்.

''ஏன் வீரா, உன் புத்தி இப்படிப் போறது?''

''ஊரே சிரிக்குமே!'' – சாந்தா.

''ஊரும் சிரிக்காது, உலகமும் சிரிக்காது'' என்றான் சத்யா.

''என்னடா சத்யா, நீயும்...''

''மாமி, இப்ப நான் உங்க மாப்பிள்ளை, 'டா' போட்டுப் பேசப்படாது... நீங்கன்னு சொல்லணும்.''

இந்த சமயம் பார்த்து படகுக் கார் வந்தது. கறுப்புக் கண்ணாடி இல்லாமல், புடவை கட்டிய தாரிணி இறங்கி வந்தாள்.

''என்னடீ, எல்லார்க்கும் சொல்லியாச்சா?'' என்று அவள் ரேவதியிடம் கேட்டாள்.

''வீரா சொன்னார். அவ்வளவுதான் ஒரே கூச்சல், குழப்பம்!''

''சரி விஷயத்தை எங்கிட்ட விடு!'' என்ற தாரிணி எழுந்தாள். அனைவரையும் வட்டமாகப் பார்த்தாள். பிறகு கலகலவென்று சிரிக்கலானாள். பிறகு –

''எல்லார்க்கும் ஒரு செய்தி!'' என்றாள்.

எல்லோரும் ஆர்வமாகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

''வீர்ராகவனுக்கும் என் சிநேகிதிக்கும் இன்னும் சில நாள்ல ஓட்டல் வுட்லண்ட்ஸ்ல கலியாணம். பிரான்ஸ், ஸ்விட்ஸர்லண்ட் போன்ற இடங்கள்ல ஹனிமூன். வீரா அப்புறம் அமெரிக்கா போயிடுவார்!''

''இதைச் சொல்ல நீ யார்?'' என்று சாரதம் வெகுண்டாள்.

''நீங்க கோபமா பேசறப்பதான் ரியல் பெரியம்மாவாத் தெரியறேள்!''

''என்ன சொன்னே?''

''நான்தான் ரேவதி. ரேவதி பஞ்சநதம். என் சிநேகிதான் தாரிணி. பெரியப்பா நீங்க சொல்லுங்களேன்!''

ரேவதி எழுந்தாள். சிரித்தாள்.

''என் பேரு தாரணி. ரேவதியும் நானும் சின்ன வயசிலேர்ந்து சிநேகிதிகள். உங்க குடும்பத்தின் முழு சரித்திரமும் தெரியும் எனக்கு. பதினஞ்சு வருஷத்துக்கு மேலா நீங்க யாரும் ரேவ்தியைப் பார்த்தது இல்லைங்கற ஒரு உண்மையை என்னை



அவளாக நடிக்க வைச்சது. ரேவதி ஒரு ரிசர்வ்ட் டைப். எதை எப்படிப் பேசணும், செயலாத்தணும்னெல்லாம் அவளுக்குத் தெரியாது. பெரியம்மாகிட்டயோ சாந்தாகிட்டேயோ சரிக்குச் சரி நின்று பேச தைரியம் கிடையாது. இதெல்லாம் எனக்குக் கைவந்த கலை. 'நான் என் பெரியப்பா குடும்பத்துக்கு எல்லாம் செய்யக் கடமைப்பட்டவ. ஆனா என் திட்டங்களை எப்படிச் செய்து முடிப்பதுன்னு குழப்பமா இருக்குன்னா. அதுக்கு அப்புறம்தான் இப்படி ஒரு நாடகத்துக்கு ஸ்கிரிப்ட் எழுதினோம். ஆனா ஒரு விஷயம். வீராவை எனக்கு முன்னமே தெரியும். ரெண்டு வருஷம் முன்னாடி, என் அப்பா பெசன்ட் நகர்ல கட்டின நாலு மாடிக் கட்டிடத்துக்கு அவர்தான் ஸைட் என்ஜினியர். அப்ப ஏற்பட்ட பரிச்சயம் சிநேகமா வளர்ந்தது. நான் இவ்வளவு சொல்லியும் சந்தேகம் இருந்தா, நானும் ரேவதியும் எங்க பாஸ்போர்ட்டுகளைக் காட்டறோம்.''

''அவசியம் இல்லே, தாரிணி. நீ வந்த அன்னிக்கே, நீ என் தம்பி பொண் இல்லைன்னு எனக்குத் தெரியும்.''

''எப்படி பெரியப்பா.. சே... பழக்கதோஷம். அதனால என்ன... பெரியப்பான்னு கூப்பிடறதில தப்பு இல்லே. எப்படித் தெரியும்.''



''டாடி! உங்களுக்குத் தெரியாம கார் ஓட்டக் கத்துக்கிட்டேன்.''

—ராமமூர்த்தி

''அம்மாவுக்குத் தெரியாம ஐஸ்க்ரீம் கோன்ஸ் வந்ததாக ஜாலிதான்.''

—கேபி



''சத்யா என் காதுக்கு மட்டும் சொன்னான்.''

''சத்யா உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''நான்தான்டீ முன்கூட்டியே சத்யாவுக்கு போன்ல சொன்னேன். நாக்கை அறுத்தாலும் ரகசியத்தை வெளியே சொல்லமாட்டான்னு தெரியும். என் அப்பாவுக்கு சத்யான்னா உசிர்'' என்றாள் ரேவதி.

''எனக்கும்தான்!'' என்று சுபா சத்யாவின் காதில் கிசுகிசுத்தாள்.

''எனக்கு ஒரே குழப்பமா இருக்கு!'' என்றாள் சாரதம்.

ரேவதி, ''பெரியம்மா இனிமே ஒரு குழப்பமும் இராது. நான் எழுதிக் கொடுத்ததையெல்லாம்தான் என் சிநேகிதி நடத்திக் காட்டினாள். நீங்க வேணும்னா பிரொபசர் சார்நாத்தைக் கேளுங்க!''

சார்நாத் சிரித்தான்.

''இந்த இரண்டு குட்டிச் சாத்தான்களுமா ஏதோ விஷமம் செய்யப் போறான்னு எனக்கு ஏற்கெனவே தெரியும். ஆனா விவரமா எதுவும் தெரியாது. ஆனா ஒண்ணு. இந்த ரெண்டு பேராலதான் வைதேகி என் மனைவி ஆனாள்'' என்றான் அவன்.

வீரா எழுந்தான்.

''இவ்வளவெல்லாம் செய்த ரேவதிக்கு – உண்மையான ரேவதிக்கு நாம கடன்பட்டிருக்கோம், அம்மா, கைம்மாறு செய்தாகணும்!''

''குடும்பத்தையே பிரிச்சு வைச்சவளுக்கு கைம்மாறா'' என்றாள் தாரிணி. பிறகு சிரித்துக் கொண்டே –

''அவளுக்கும் என் அண்ணாவுக்கும் இந்த மாசம் கடைசி வெள்ளி அன்னிக்கு ஓட்டல் நியு உட்லண்ட்ஸ்ல கலியாணம். ப்யூர் லவ் மாரேஜ். என் அண்ணா ஹார்வர்ட்ல எங்க ரெண்டு பேருக்கும் பிரொபசர். பேர் கே. குமார், கல்யாண்குமார்!'' என்றாள்.

''ரேவதி... நீ என் பொண். நான்தான் கன்னிகாதானம் செய்து கொடுப்பேன்!''

''எனக்கு வேறு யார் இருக்கா, பெரியப்பா? நீங்களும் பெரியம்மாவும்மான் எல்லாம்.''

''அப்பப்பா எத்தனை கலியாணங்கள்!'' என்றான் சத்யா.

''என்ன எத்தனைன்னு அசடு வழியறீங்க, சத்யா... நானு... நீ, வைதேகி, தாரிணி, ரேவதி...''

''அதான் தப்பு! சிவகுமாரை மறந்துட்டியே. அவன்



உன் மாமா பிள்ளை இல்லையா?''

''கலியாணச் சாப்பாட்டுக்குக் குறைச்சலே இல்லே!'' என்றான் பாபு.

''சப்புக் கொட்டி சப்புக் கொட்டி உங்க நாக்கே சின்னதாயிடும்!'' என்றாள் சாந்தா.

திடீரென ஒரு புதுக்குரல்.

சமையற்கார சிப்பந்தி, ''சார் இலை போட்டாச்சு!'' என்றார்.

பாபு ஓடினான்.

சத்யா நடந்தான்.

வீரா நகர்ந்தான்.

சாம்பசிவம் மட்டும் அசையவில்லை. அவர் இதுவரை அனுபவித்திராத ஆனந்த மயக்கத்தில் ஆழ்ந்து போயிருந்தார். அதிலிருந்து அவரை மீட்டு அழைத்துப் போக சாரதத்துக்கு நீண்ட நேரமாகியது.

(முற்றும்)

